விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 11 திங்கட்கிழமை (24.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 126

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# மிகப் பயங்கரமான போரை இலங்கை எதிர்கொள்ளும்



## அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

**இராணுவத்தாலும் துணை இராணுவக்குழுவினராலும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் படுகொலைசெய்யப்பட்டு வருவதால் இலங்கை ஒரு பயங்கரமான போரை நோக்கிச்செல்கின்றது.இவ்வாறு தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் எச்சரித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார். அதன் விபரம்வருமாறு,வடக்கு-கிழக்கில் நிலைமை மிகவும் மோசமடைந்து சீர்குலைந்துள்ளது. கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரியைப்போல் நிழல் யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டு மிகவும் மோசமான நிலை உருவாகியுள்ளது.

ஜெனீவாப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிமார் கோயிலடியில் சூடு ஐஸ்கிறீம் வியாபாரி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை நாச்சிமார் கோயிலடியில் நேற்றிரவு 7மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஐஸ்கிறீம் விற்பனையாளரான எஸ்.கஜேந்திரன் (வயது 25) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்.காங்கேசன்துறை வீதியில் ஐஸ்கிறீம் விற்பனை வானில் சென்று கொண்டிருந்தபோது நாச்சிமார் கோயில் அருகே இரவு 7மணியளவில் இத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் படுகாயமடைந்த கஜேந்திரனை அம்புலன்ஸ் வண்டியில் கொண்டு சென்ற போது அவ்வண்டியும் அரை மணித்தியாலத்திற்கு மேலாக இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.. (ந-4.5)

# பேச்சுக்கு வருமாறு புலிகளை நோர்வே வலியுறுத்த வேண்டும்

## ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் ரம்புக்வெல

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலைசெய்யப்பட்டதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் உட்கட்ட சந்திப்புகளுக்காக தளபதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதை நிறுத்திவிட்டதாக நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் கேகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கம் தொடர்ந்தும் சமாதான முனைப்புகளுக்காக விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது. எனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் இவ் விடயத்தில் பின்னடிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே சர்வதேசம் குறிப்பாக சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வே தமிழீழ விடுதலைப்புலிகளின் விடயத்தில் அழுத்தத்தினை பிரயோகிக்கவேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அரச செயலகப்பணிப்பாளர் பாலித கோகன்ன கருத்துத்தெரிவிக்கையில், விடுதலைப்புலிகள் வன்முறைகளை நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இது தொடர்பில் அரசாங்கத்திற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமிடையில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. விடுதலைப்புலிகள் தொடர்ந்து இத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டால் ஐரோப்பாவில் பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் விடுதலைப் புலிகள் இணைக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றோம். (10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத்தூதர் பௌயரை சந்திக்க ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வே சிறப்புப் பிரதிநிதி ஹன்சன் பௌயரை சந்திக்க ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மறுத்துள்ளார்.

நோர்வே அனுசரணைப்பணி தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள ஆகியோர் கடும் விமர்சனங்களை வெளியிட்டிருந்தனர்.

இந்த விமர்ச (10 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புளொட் உறுப்பினர் நாவாந்துறையில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் முன்னாள் புளொட் உறுப்பினர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் ஒரு மணி அளவில் காதி அபூபக்கர் வீதியில் உள்ள அவரது வீட்டிற்கு வெளியே வைத்தே இத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான அமிர்தநாதன் கென்னடி (10 ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலையில் பட்டப்பகலில் ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை



ஓட்டோச் சாரதி ஒருவர் நேற்று பகல் ஒரு மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவத்தில் கட்டப்பிராயைச் சேர்ந்த குருநாதன் ஜனார்த்தனன் (வயது 23) என் பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார் .சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, பருத்தித்துறை வீதி இருபாலைச் சந்தியில் தனது ஓட்டோவில் அமர்ந்திருந்த வேளை ஆயுத தாரிகள் இவரை நெருங்கிய போது அவர் தப்பியோடியதாகவும் அவரைப் பின் தொடர்ந்த ஆயுததாரிகள் வைரவர் கோயிலடியில் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறி நிதி நந்தசேகரன் சடலத்தை பிரேதபரி சோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக் குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-15.132.136)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுனாமியால் பாதிப்புற்றவர்களுக்கு உதவ "ஜீவன சக்தி" கடன் திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் (யு.என்.டி.பி) இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களது ஜீவனோபாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக 'ஜீவன சக்தி' என்ற கடன் திட்டத்தை அறிமுகப்படுத் தியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் வீட்டு சேதங்களைத் திருத்திக்கொள்வதற்கும், பாதிக்கப்பட்ட சிறிய தொழில் முயற்சிகளை மீள் ஆரம்பிப்பதற்கு அல்லது புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும்50ஆயிரம் ரூபா வரை கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, ருஹுணு அபிவிருத்தி வங்கி, செலான் வங்கி ஆகியவற்றுக் கூடாக வழங்கப்படும் இக்கடன் திட்டத்திற்கென 101 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள், வியாபார முயற்சிகளை மேற்கொள்வோர் தொழில் முயற்சிகளில் சேதங்கள் அல்லது இழப்புக்கள் ஏற்பட்டோர் இக்கடனைப் பெற விண்ணப்பிக்க முடியும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் புதிதாக சிறிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்புவோரும் இக்கடனுக்காக விண்ணப்பிக்கலாம். தனித்தலைமைக் குடும்பத்தவர்கள் மற்றும் பெண்களுக்கு இக்கடனைப் பெறுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வருடாந்தம் 8 வீத வட்டியில் 5 ஆயிரம்ரூபாதொடக்கம்50ஆயிரம் ரூபாவரை பாதிக்கப்பட்ட ஒருவருக்கு கடன் வழங்கப்படும். இக்கடன் திட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கம்பஹா, கொழும்பு, அம்பாந்தோட்டை, மாத்தறை, களுத்துறை, காலி மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு கடனையும் திருப்பிச்செலுத்த வேண்டிய ஆகக்கூடிய காலம் 3 வருடங்கலாகும். ஒவ்வொரு தனிப்பட்ட கடன்பெறுநருக்கும்கடனை பெற்ற தினத்திலிருந்து சலுகை காலமாக 6 மாதங்கள் வழங்கப்படும்.

இந்த சலுகைக்காலத்தில் கடனுக்கான தவணைக் கொடுப்பனவினையோ வட்டியையோ செலுத்த வேண்டியதில்லை. (சு-9)

# சட்டவிரோத மின்பாவனை

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல கிராமங்களில் தொடர்ந்து சட்ட விரோத மின் பாவனைகள் அதிகரித்து வருவதாகப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோத மின்சாரம் பெறும் கிராமங்களாகவட்டு.கிழக்கு துணவி, வட்டு.தெற்கு முதலிய கோவிலடி, அராலி மத்தி ஊரத்தி, அராலி மேற்கு முத்தமிழ் கிராமம், அராலி வடக்கு மயலியற்புலம், மூளாய் வேரம், மூளாய் முன்கோடை, பண்ணாகம் பல்லசுட்டி போன்ற கிராமங்கள் இனங்காணப்பட்டிருப்பதாகவும், இக்கிராமங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவ்வப்போது மின்பாவனைகளை இனங்கண்டு தடுத்துவருகின்ற போதிலும், மீண்டும் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்று பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (சு-49)

# ஜெனீவா பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும்

## ஐ.தே.க.வேண்டுகோள்

அரசாங்கம் ஜெனீவா பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச்செயலளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களை ஐக்கிய தேசிக்கட்சி கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவா பேச்சுவார்த்தை களை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கு சில சிக்கல்கள் இருக்கின்றதாக அரசாங்கம் கூறிவருகின்றது. இத்தகைய சிக்கல்களை தோற்றுவித்தவர்கள் அரசில் தான் உள்ளார்கள். இதேவேளை இரு தரப்பினருக்குமிடையே நம்பிக்கையின்மையே பேச்சுக்கள் நடைபெறாமல் தடைப்படுவதற்கு பிரதான காரணமென்று அவர் தெரிவித்துள்ளார்.

வன்முறைகள் மூலம் சமாதானம் பெறமுடியாது என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடு எனவே பேச்சுவார்த்தைகளை திரும்ப ஆரம்பிக்க இரு தரப்பினரும் பொறுப்புடன் செயற்படவேண்டுமென்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சு-9)

# காணி இடாப்பு தயாரிப்பு

யாழ்.மாவட்டத்தில் சம்மேளன ரீதியாக காணி இடாப்புத்தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சம்மேளனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு சம்மேளனரீதியாவும் மேற்படி பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இப்பதிவுக்காக, காரைநகர் விவசாயிகளை விவாய சம்மேளன அங்கத்தவர்கள் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்றும் பூர்த்திசெய்து இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களுடன் காணி உறுதியின் நிழற்பிரதியையும், உறுதி இல்லாதோர் குத்தகைச் சீட்டின் நிழற்பிரதியையும் தவறாது இணைத்து அனுப்ப வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. (சு-49)

# ஓய்வூதியம்

(ஊர்காவற்றுறை)

அரசாங்க ஓய்வுதியர்களுக்கான வைகாசி ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 9ஆந் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் என ஓய்வூதியப்பணிப்பாளர் சகல பிரதேசசெயலாளர்களுக்கும் உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே வைகாசி ஓய்வூதியம் வழங்கும் தினம் 10ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது அது மாற்றப்பட்டுள் ளது. (சு-72)

# இராசி பலன்

**24.04.2006**
**(சித்திரை 11, திங்கட்கிழமை)**
**ஏகாதசி முற்பகல் 10.22 மணிவரை**
**சதயம் முற்பகல் 07.02 மணிவரை**
**புரட்டாதி பின்னிரவு 5.23மணிவரை**
**இராகுகாலம் 07.30-09.00மணிவரை**
**சுபநேரம் 12.00-1.30 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**மேடம்** — மனமகிழ்ச்சி, புகழ், காரிய சித்தி, புதிய பொருள் சேர்க்கை.

**இடபம்** — நல்ல செய்தி, நிலைமாற்றம், அதிக பிரயாசை, காரிய நன்மை.

**மிதுனம்** — புதிய திட்டமிடல், ரோகநிலை, முயற்சி தாமதம், பிதாசிந்தை.

**கடகம்** — பிரயாண பயம், மரியாதைக் குறைவு, காரியதடங்கல், ரோகநிலை.

**சிங்கம்** — நண்பர்கள் சந்திப்பு, பெருமையடைதல், உற்சாகம், தொழில் வருமானம்.

**கன்னி** — உடல்நலம், காரிய அனுகூலம், சுப செய்தி, சத்துருஜெயம்.

**துலாம்** — வியாபார நன்மை, பூர்வபுண்ணிய கருமம், முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு.

**விருச்சிகம்** — மனப்பயம், புதிய விடயம், மாதாசுகம், ரோகநிவர்த்தி.

**தனுசு** — இஷ்டசித்தி, பிரயாண நன்மை, இனிய சம்பவம், உடல்நலம்.

**மகரம்** — தனவிரயம், எடுத்தகருமங்கள் தாமதமாகும், குடும்பக்கவலை, ரோகநிலை.

**கும்பம்** — நல்லமுயற்சி, பெரியோர் ஆதரவு, தேக நலன், தொழில்நன்மை.

**மீனம்** — நண்பர்கள் மனஸ்தாபம், சயன சுகக் குறைவு, இடமாற்றம், பணவிரயம்.

\- வளவன்

# புத்தாண்டு தின விளையாட்டுப் போட்டி

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபராலும் சமுர்த்தி வங்கி சங்கத்தாலும் சித்திரைப் புத்தாண்டு தினத்தையொட்டி நாளை மறுதினம் புதன் கிழமை விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.

போட்டி விபரம் பின்வருமாறு,

1. மரதன் ஓட்டப்போட்டி காலை 7.00 மணி
2. பெண்களுக்கான சைக்கிள் போட்டி 8 மணி
3. கயிறு இழுத்தல் போட்டி பிற்பகல் 2.00மணி
4. விநோத உடைப்போட்டி பிற்பகல் 2.00மணி
5. வழுக்கு மரம் ஏறுதல் பிற்பகல் 2.00மணி

போட்டிகளில் கலந்துகொள்வோர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தரிடம் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-72)

# குருப்பட்டம் பெறுதல்

யாழ்.மறை மாவட்டத்திலுள்ள மூன்று அருட்சகோதரர்கள் எதிர்வரும் மே மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். பாசையூர் புனித. அந்தோனியார் ஆலயப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் பாலதாஸ் பிறாயன் புனித-மரியாள் பேராலயப் பங்கைச் சேர்ந்த நீக்கிலஸ் லெஸ்லி அன்ரனி,மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் எ. செ.சி.மரியதாஸ் ஆகியோரே குருப்பட்டம் பெறவுள் ளனர். (சு-72)

# வீடுகளில்வைத்து மதுபானம் விற்றவர்களுக்கு அபராதம்

வீடுகளில் அனுமதிப்பத்திரமின்றி சாராய விற்பனையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப் பட்ட மூவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதியால் அபராதப் பணமும் தண்டனையும் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மேற்படி மூன்று நபர்களையும் கைதுசெய்த பொலிஸார் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியவேளை மூவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்துஇருவருக்கும் தலா10ஆயிரம்ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 4 மாத சிறைத் தண்டனை அனுபவிக்கும் படியும் மற்றைய நபருக்கு நீதிமன்றில் ஏற்கனவே இவ்வாறான குற்றத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டிருந்ததினால் ஐந்து மாத சிறைத்தண்டனையும் நீதிபதி க.அரியநாயகத்தால் விதிக்கப்பட்டது.

இதேபோல்வீடுகளில்கள் விற்பனைசெய்தஐவருக்கு எதிராகவும் மதுவரித் திணைக்களம் வழக்குத்தாக்கல் செய்திருந்தது. அவர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்துதலா ஆயிரம்ரூபா அபராதம் செலுத்தும் படி நீதிபதியால்உத்தரவிட்டுதீர்ப்பளிக்கப்பட்டது. (சு-10)

# புத்தாண்டுதின நிகழ்வுகள்

சமுர்த்தி வங்கிகளினால் நடாத்தப்படும் புத்தாண்டு தின நிகழ்வுகள் யாழ்.மாவட்டத்திற்குள் காரை நகரிலேயே மிகவும் சிறப்பாக நடைபெற்றிருப்பபது மிக்க மகிழ்ச்சி தருகிறது. எனயாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரகுமார்தெரிவித்துள்ளார்.

காரைநகர்சமுர்த்திவங்கியினால் அண்மையில் நடாத்தப்பட்ட புத்தாண்டு தினக் கொண்டாட்டத்தின் போது கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதேஇவ்வாறுதெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை காரை நகர் உதவி அரச அதிபர் க.சிறி மோகன் தலைமையில் நடைபெற்ற புத்தாண்டுதினக் கொண்டாட்டத் தில் விருந்தினர்கள் காரைநகர் பிரதேச செயலகத்தில் இருந்து மங்கள வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவியாளர் ம.மகேஸ்வரகுமார் காரை நகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலய அதிபர் கா.குமாரவேல், யூனியன் அசூரன்ஸ் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.சிறி வரதன் மற்றும் சமுர்த்தி வங்கி முகாமையாளர்ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் போட்டியை ஆரம்பித்துவைத்து உரையாற்றி சமுர்த்தி உதவி ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்தி திட்டத்தின் ஒரு அங்கமாகவேசமுர்த்திவங்கிநடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. கிராமத்தின் சேமிப்பு கிராமத்தின் அபிவிருத்திக்கே என்ற சிந்தனையில் உதித்ததேசமுர்த்திவங்கியாகும்.இன்று சமுர்த்தி வங்கியினால் நாடளாவிய ரீதியில் 1000புத் தாண்டு தினக் கொண்டாட்டம் நடாத் தப்பட்டு வருகின்றது. அந்தவகை யில் யாழ். மாவட்டத்தில் காரை நக ரில் சிறப்பாக நடைபெறுவது பெருமை தருகிறது என்றார். (சு-246)






யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் செயல்திறன் அரங்க இயக்கத்தினால் நடாத்தப்பட்ட உள சமூகப் பணியில் வெளிப்பாட்டுமுறைமைகள் தொடர்பான செயற்திட்ட நிகழ்வில் தொடக்கவுரையினை செயற்திறன் அரங்க இயக்குநர் தே.தேவானந்த் நிகழ்த்துவதையும் அமர்வு ஒன்றிற்கான தலைமையுரையினை வைத்திய கலாநிதி எஸ்.சிவ யோகன் நிகழ்துவதையும் அமர்வு இரண்டிற்கான தலைமை யுரையினை திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்துவதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- ரி.திலீவின்பன், எஸ்.ரி.ராஜா)

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் மாத இறுதியில் வெளிவரும்

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சை முடிவுகளை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் பரீட்சை முடிவுகளை வெளியிட உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் தரவுப் பதிவுப் பிரிவிலுள்ள தரவு பதியுனர்களின் மேலதிகக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினை காரணமாக குறிப்பிட்ட மாதத்தில் இப் பரீட்சை முடிவுகளை வெளியிட முடியாமல் போனதாக அவர் கூறினார்.

இருந்தபோதிலும், கடந்த வெள்ளிக்கிழமை தரவு பதியுனர்களின் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளதால், இம்மாதத்தின் இறுதி வாரத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை வெளியிட முடியும் என எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஒரு இலட்சத்து 47ஆயிரத்துக்கு மேற்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் 3இலட்சத்து 78ஆயிரத்துக்கு அதிகமான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# சீனா அரசுடன் இலங்கை அரசு தொடர்ந்து பேச்சு நடாத்தும்

உத்தேச அம்பாந்தோட்டை துறைமுகத்தில் எண்ணெய் விநியோக நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான உதவியைப் பெற்றுக்கொள்வதற்கென இலங்கை அரசாங்கம், சீன அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்துமென்று துறைமுகங்கள் விமானப் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் சில்வா தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து சேரும் கப்பல்களுக்கு தண்ணீரை விற்பனை செய்வதன் மூலமும் இலங்கை மேலும் வெளிநாட்டு நாணயமாற்றை சம்பாதிக்க இருக்கிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)



# வணக்கஸ்தலங்கள், பாடசாலைகளை அண்மித்த பகுதியில் மதுவிற்பதற்கு தடை

(கொழும்பு)

வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிலிருந்து 100 மீற்றருக்குள் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதியை இரத்துச் செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மஹிந்த சிந்தனைக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளதாகவும் கலால் திணைக்களத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலைகளிலிருந்து 500 மீற்றருக்குள் இயங்கும் சிற்றுண்டிச்சாலைகளின் அனுமதியும் இரத்துச் செய்யப்படவுள்ளது. (க-9)

## தூறல் நீர்ப்பாசன கருவிகள் வழங்க நடவடிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி விவசாயிகளுக்கு தூறல் நீர்ப்பாசன கருவிகள் வழங்க கமநல திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பகுதிக்கு 75 தூறல் நீர்ப்பாசன கருவிகள் வழங்கப்படவுள்ளது. இதை பெற விரும்புவோர் புலோலி கமநல சேவை நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப் பிரதேசத்தில் தூறல் நீர்ப்பாசனத்திற்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதாக கமநல சேவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-35)

# பாடத் திட்டங்களில் மாற்றம்

அடுத்த ஆண்டு தொடக்கம் அரசாங்கப் பாடசாலைகளின் இடைநிலை வகுப்புக்களில் தற்போது நடைமுறையில் உள்ள பாடத்திட்டங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

சமகால தேவைகளுக்கு அமைவாக பாடசாலைக் கல்வியை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் தரம் ஆறு தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுக்கு இப்புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இப்புதிய மாற்றங்களின் அடிப்படையில் தரம் ஆறு தொடக்கம் தரம் ஒன்பது வரையான வகுப்புகளுக்கு 13பாடங்கள் போதிக்கப்படவுள்ளதுடன் தரம் 10தொடக்கம் தரம்11 வரையான வகுப்புகளுக்கு ஒன்பது பாடங்களும் போதிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் நாயகம் ஆரியரத்ன ஹேவகே தெரிவித்துள்ளார்.

மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எதிர்வரும் 2008ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள்.

தாய்மொழி, கணிதம், சமயம், ஆங்கிலம், வரலாறு, விஞ்ஞானம் ஆகிய ஆறுபாடங்கள் கட்டாயப் பாடங்களாகவும் ஏனைய மூன்று பாடங்கள் தெரிவுக்குரிய பாடங்களாகவும் போதிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-9)

## விவசாயிகளின் கவனத்திற்கு

(மருதங்கேணி)

வடமராட்சி பிரதேசத்தில் 2006-2007பெரும்போக நெற் செய்கை பண்ணப்படும் விவசாயிகளுக்கு ஏரி402, ஏரி 353, பி டபிள்யு-381 ஆகிய ரக விதை நெல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே விதை நெல் தேவையான விவசாயிகள் தமது பகுதி விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு பதிவை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-35)



# மேதினக் கொண்டாட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்துள்ள தொழிற் சங்கங்கள் எதிர்வரும் மே தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடுவதெனத் தீர்மானித்துள்ளன.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டத்தை கொழும்பு நகர மண்டப மைதானத்தில் நடத்துவதென அமைச்சர் அதாவுட செனவிரத்ன, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் கலந்துகொண்ட கூட்டமொன்றில் முடிவுசெய்யப்பட்டது.

முன்னணியின் மேதினக் கூட்டம் ஹம்பல் பூங்காவில் பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, மூன்று மணிக்கு கூட்டம் நடைபெறும் இடத்தை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-7)

## பஜனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியில் அமைந்திருக்கும் யோகாம்பிகை சங்கரன் சீரடி சாயி சங்கர மண்டபத்தில் பிரதி வியாழக்கிழமை தோறும் பி.ப. 4 மணிக்கு சீரடி பகவானின் அற்புத மகிமைப் பஜனை நடைபெறும் எனவும் இதில் சகல பகவான் அன்பர்களையும் கலந்து சிறப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (கு)



# தேசிய இலக்கிய கலைப் பெருவிழா

# வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தால் 2006 தேசிய இலக்கியக் கலைப் பெருவிழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதை, விமர்சனம் ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

**கட்டுரை-கனிஷ்ட பிரிவு**

1ஆம்இடம்:-துர்க்கா ஜெயரட்ணம்-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

2ஆம் இடம்:-சகானா செல்வர்த்தினம் -யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

3ஆம்இடம்:-சூ.சூரியதாட்சாயினி -யா/விக்னேஸ்வராக் கல்லூரி

3ஆம் இடம்:-ரவிச்சந்திரிக்கா நவரத்தினம்-யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

**சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம்-யூடிற்பாமினி பாலேந்திரன்-யா/விக்னேஸ்வராக் கல்லூரி

2ஆம் இடம்:-சித்திராங்கி செல்வச்சோதி-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

3ஆம் இடம்:-அஞ்சனா இராஜகுலேந்திரம்-யா/வின்னேஸ்வராக் கல்லூரி

**கவிதை**

**மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு**

1ஆம்இடம்:-இராசகுமாரன் மயூரன்-ஸ்ரீபரமானந்தா ஆச்சிரம அறநெறிப் பாடசாலை

2ஆம் இடம்-பு.ஜீவனா-யா/விக்னேஸ்வாக் கல்லூரி

3ஆம் இடம்:-க.றஜீவா-யா/விக்னேஸ்வராக் கல்லூரி

3ஆம்இடம்:-நாகேந்திரராஜா வினோத்-யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்

**கவிதை திறந்த பிரிவு**

1ஆம் இடம்:-கணபதிப் பிள்ளை முத்துவேலு-இமையாணன் கிழக்கு

2ஆம் இடம்:-திருமதி பத்தினிப்பிள்ளை வல்லிபுரம்-துன்னாலை மத்தி

2ஆம்இடம்:-திருமதி உஷாதேவி செல்வச்சோதி -சமரபாகு

3ஆம்இடம்:-திருமதி கவிதா தவேஸ்வரன்-நெல்லியடி வடக்கு

**சிறுகதை**

**மட்டுப்படுத்தப்பட்டது**

1ஆம்இடம்:-வல்லிபுரம் ரமணன் -யா/விக்னேஸ்வராக் கல்லூரி

2ஆம் இடம்:-சுகிந்தா செல்லையா/ஸ்ரீபரமானந்தா ஆச்சிரம அறநெறிப் பாடசாலை

3ஆம் இடம்:-துளசிகா விஜயபாகு-செல்வபுரம் நாகசக்தி அறநெறிப் பாடசாலை

**சிறுகதை திறந்த பிரிவு**

1ஆம்இடம்:-சி.செகராசசிங்கம்-அல்வாய் தெற்கு

2ஆம் இடம்:-திருமதி கவிதா தவேஸ்வரன் -நெல்லியடி வடக்கு

3ஆம்இடம்:-க.பாலன்-இமையாணன்

**சிறுகதை விமர்சனம்**

1ஆம்இடம்:-சிவந்தினி சிவராசா-யா/விக்னேஸ்வராக் கல்லூரி

2ஆம் இடம்:-சி.விதுஷா-யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

**கவிதை விமர்சனம்**

1ஆம்இடம்:-கவிதா இராசையா-யா/விக்னேஸ்வராக் கல்லூரி

2ஆம் இடம்-நசூரியா-யா/வடமராட்சி மத்திய கல்லூரி

3ஆம் இடம்:-இ.சிவரேகா-யா/வடமராட்சி மத்திய கல்லூரி

**எழுந்தமான கவிதை**


1ஆம் இடம்:-கணபதிப் பிள்ளை முத்துவேலு-இமையாணன் கிழக்கு


2ஆம் இடம்:-திருமதி. பத்தினிப் பிள்ளை வல்லிபுரம்-துன்னாலை மத்தி

3ஆம் இடம்:-த.கிருபாகரன்-கரவெட்டி மத்தி. (க-101)

மணிமேகலைப் பிரசுரத்தின் யாழ்ப்பாணஎழுத்தாளர்களின் 8 நூல்கள் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் மாலை 2மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் திருக்குறள் இன்பத்துப்பால் நூல் ஆசிரியர் கே. வி. குணசேகரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட நூல் ஆசிரியர்களையும், மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குநர் தமிழ்வாணன் வரவேற்புரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ரி.ராஜா)





# இன்று ஒரு தகவல்

## நட்புறவு

இங்கிலாந்து தேசத்தில் ஒரு இளைஞன் இருந்தான். அவன் பெயர் ஜோன். ஜேர்மனியில் மிஸ்மேரி என்று ஒரு பெண் இந்த இரண்டு பேரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டதில்லை. ஆனால் நண்பர்கள் பேனா நண்பர்கள். ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக்கொள்வார்கள்.

பல ஆண்டுகள் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் மேரி எப்படி இருப்பாள் என்று பார்க்கவேண்டுமென்ற ஆர்வம் ஜோனுக்கு உருவானது . உடனே மேரிக்கு ஒரு கடிதம் எழுதினான் "மேரி உனது புகைப்படம் ஒன்று அனுப்பிவை" என்ற எழுதினான்.

மேரியிடமிருந்து கடிதம் வந்தது ஆனால் புகைப்படம் வரவில்லை அந்தப் பெண் ஏதோ காரணம் கூறிப் புகைப்படம் அனுப்பவில்லை. இதற்கிடையில் உலகம் போர்ஆரம்பமாகிவிட்டது. அதனால் கடிதப் போக்குவரத்து நின்று போய்விட்டது. ஒருவருக் கொருவர் என்ன ஆனார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

உலகப் போர் ஒருவழியாக முடிந்தது. அதன்பின் அந்த இளைஞன் ஜேர்மனிக்குப் போகக் கூடிய வாய்ப்பு வந்தது. மிகவும் ஆர்வமாகப் போனான் அந்தப்பெண் மேரி எப்படி இருக்கிறாளோ என்ன ஆனாளோ முகவரி மட்டும் கையில் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அந்த இடத்தைத் தேடிக் கண்டு பிடித்துப் போய்ச் சேர்ந்துவிட்டான்.

அங்கே போய்ப்பார்த்தால் மேரியின் வீடு இடிந்து போய்க்கிடந்தது. குண்டு வீச்சினால் அப்படி ஆகிவிட்டது. சிதைந்துபோன அந்த வீட்டில் வேறு யாருமே இல்லை அக்கம் பக்கத்தில் விசாரித்தான். அவர்கள் விபரம் கூறினார்கள்.

மேரி இறந்து போய்விட்டாளாம் மேரியின் வயது 80 ஆமாம் 80 மூதாட்டி அந்த அம்மா இறந்து போவதற்கு முன் போன நண்பர் ஜோன் படிப்பதற்காக ஒரு கடிதம் எழுதியிருந்தார் அவர் என்ன எழுதியிருந்தார் தெரியுமா? "என் இனிய நண்பரே நான் ஏன் புகைப்படம் அனுப்பவில்லை என்று இப்போது புரிகிறதா? ஒருவேளை நான் அனுப்பியிருந்தால் உங்கள் இளமைக் கனவுகளை எனக்கு எழுதியிருக்க மாட்டீர்கள் நானும் அவற்றைப் படித்து ரசித்திருக்க மாட்டேன். நன்றி நண்பரே" என்று எழுதியிருந்தார்களாம்.

இது உண்மையாக நடந்த ஒரு சம்பவம் நட்பு பல வகை அதில் இது ஒரு வகை. பள்ளிநட்பு, அலுலக நட்பு, பேனா நட்பு, பயண நட்பு, குடும்ப நட்பு என்று சொல்லப்படும் அமைச்சூர் ரேடியோ நட்பு எனப் பல வகை நட்புகள் இந்த உலகத்தில் உண்டு.

நட்பு என்பது வேறு. உறவு என்பது வேறு நண்பர்கள் அறிமுகமாகின்றவர்கள் உறவினர்கள் உடன் பிறப்பால் திருமணத்தால் நம்மோடு சம்பந்தப்படுபவர்கள். நட்பு துண்டிக்கப்படலாம். உறவு ஒட்டிக் கொண்டே தானிருக்கும்.

இவன் நேற்று வரைக்கும் என் நண்பனாக இருந்தான். இன்று விரோதி ஆகிவிட்டான் என்று கூறலாம் இவர் நேற்றுவரைக்கும் எனது சித்தப்பாவாக இருந்தார். இன்றிலிருந்து வேறு ஆளாக மாறிவிட்டார் என்று கூற முடியாது.

உண்மையான நட்பு உறவு மாதிரியாக வேண்டும் அது தான் நட்புறவு. அது எப்படி இருக்கவேண்டும்மென்று வள்ளுவர் சொல்கிறார். "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண்களைவதாம் நட்பு" இந்தக் காலத்திலெல்லாம். எத்தனையோ விதமான நட்புறவுகள். இரண்டு பேர் முதலில் பேனா நண்பர்களாக இருந்தார்கள் அதன்பின் நேரில் சந்தித்தார்கள் நட்பு நட்புபுறவு ஆனது அந்த இரண்டு பேரில் ஒருவன் சொன்னான் "இவனை என் கூடப் பிறந்த சகோதரனாகவே வைத்துக்கொண்டேன் சார். அது தான் இப்போது எனக்கு இடைஞ்சலாகி விட்டது" என்றான். "எப்படி?" என்று கேட்டேன் இப்போது அவன் என் சொத்தில் பாதிப்பங்கு கேட்கிறான் சார் என்றான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கூட்டம்

வலிகாமம்வடக்கு குடியேறல் சம்பந்தமான கூட்டம் ஒன்று தெல்லிப்பளை பிரதேசசபை செயலத்தில் கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்ட மனித நேய ஒன்றியத்தலைவர் எஸ் பரமநாதன் ,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் , சட்டதரணியுமான அ. விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை,கிராமசேவகர்கள் மூலம் 7ஆயிரத்து 615 குடும்பங்கள் வலிகாம் வடக்கிற்கு குடியேறுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கின்றனா. இவை சம்பந்தமான தரவுகளை அடுத்த மாதம் 8ஆம் திகதி உயர் நீதி மன்ற பிரதம நீதியரசருக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-7)

# வவு. இல் கொல்லப்பட்ட சிறுவனுக்கு நாம் போர்ப்பயிற்சிகள் வழங்கவில்லை

## யுனிசெப்பின் கருத்துக்கு விடுதலைப்புலிகளின் சிறார் பாதுகாப்புக்குழு விளக்கமளிப்பு

(கொழும்பு)

வவுனியாவில் நடந்த கிளைமோர்த்தாக்குதலில் 17 வயது நிசாந்தன் இறந்தது தொடர்பாக யுனிசெப் வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு விடுதலைப் புலிகளின் சிறார்பாதுகாப்புக்குழு விளக்கம் அளித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் சிறார் பாதுகாப்புகுழு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கிளிநொச்சி விநாயகபுரத்தைச் சேர்ந்த 17வயதான நிசாந்தன் குடும்பத்தின் மூத்த மகனாவார். நிசாந்தனுக்கு ஒரு தங்கையும் தம்பியும் உள்ளனர் நிசாந்தனுக்கு மூன்று வயதாக இருக்கும் போது அவரின் தந்தை குடும்பத்தை விட்டுப்பிரிந்து சென்றுவிட்டார்.

தந்தை அவர்களை விட்டுப்பிரியும் போது நிசாந்தனின் தங்கைக்கு ஒரு வயது தம்பி தாயின் வயிற் றில் இருந்தார். நிசாந்தினின் தாயும் பாட்டியும் மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு மிகவும் துன்பப்பட்டனர். அக்காலத்தில் அரசாங்கம் விதித்திருந்த பொருளாதாரத் தடைகளினால் அவர்கள் மிகவும் சிரமான ஜீவனத்தையே நடத்தி வந்தனர்.

பத்துவயதாக இருக்கும் போது நிசாந்தன் தனது குடும்பத்தினருக்கு உதவுவதற்காக சிறிய கடையில் வேலைக்குச் சேர்ந்தார். எனினும் அதில் கிடைத்த வருமானம் குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை இக் காலப்பகுதியில் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக நிசாந்தனின் குடும்பத்தினர் வவுனியாவிற்கு இடம்பெயர்ந்தனர்.

அங்கு நிசாந்தனின் தாயார் மறுமணம் செய்து கொண்டார். அந்த திருமணத்தின் மூலம் அவர் மேலும் மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். நிசாந்தனின் தாயாரின் இரண்டாவது கணவர் மதுவிற்கு அடிமையானவர். அவரினால் குடும்பத்திற்கு எவ்வித உதவியும் கிட்டவில்லை. 2001 ஆம் ஆண்டு நிசாந்தன் தனது தம்பியுடனும் பாட்டியுடனும் மீண்டும் கிளிநொச்சிக்கு வந்தார்.

ஆனால் நிசாந்தனின் தாயாரும் தங்கையும் தாயின் மறுமணத்தில் பிறந்த குழந்தைகளும் வவுனியாவிலிலே தங்கிவிட்டனர். 2004 ஆம் ஆண்டு நிசாந்தனின் தாயாரும் ஏனையவர்களும் மீண்டும் கிளிநொச்சிக்கே வந்து சேர்ந்தனர்.

### சிறுவயதிலிலேயே குடும்ப சுமையை ஏற்ற நிசாந்தன்

ஒரு சாரதியாக வரவேண்டும் என்பது நிசாந்தனின் இலட்சியமாக இருந்தது. அதன் மூலம் தனது குடும்பத்திற்கு உதவலாம் என்றும் அவர் எண்ணினார்.

தன்னை வாகனங்களை செலுத்துவதற்கு பயிற்றுவிக்குமாறு அவர் தனது மாமனாரிடம் கேட்டார். இதனையடுத்து நிசாந்தனின் உறவினர் ஒருவர் அவரை விடுதலைப் புலிகளின் விநியோகப்பிரிவிற்கு அழைத்துச் சென்று அவருக்கு அங்கு வேலையைப் பெற்றுக் கொடுத்தார். அங்கு சாரதியாக வேலைக்குச் சேர்ந்த நிசாந்தன் பல்வேறு இடங்களுக்கும உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் வேலையில் ஈடுபட்டார்.

நிசாந்தன் தனது கனவை நனவாக்கி விடுதலைப் புலிகளின் விநியோகப்பிரிவில் சாரதியாக பணியாற்றி வந்தார். மாதாந்த ஊதியமாக அவர் 6 ஆயிரத்து 800 ரூபாவை சம்பாதித்து வந்தார். தனது சம்பளத்தை தனது தாய்க்கும் பாட்டிக்கும் அவர் கொடுத்துவந்தார். நிசாந்தன் எந்தவித இராணுவப் பயிற்சியையும் பெற்றிருக்கவில்லை ஆயிரக்கணக்கான தமிழ் சிவிலியன்களைப் போல அவரும் விடுதலைப் புலிகளின் அரசாங்கத்தில் ஒரு ஊழியராகப் பணியாற்றி வந்தார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிசாந்தன் தனது வழமையான பணியில் ஈடுபட்டிருந்தார். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினர் அங்கு கிளைமோர் குண்டொன்றைப் பொருத்தியிருந்தனர். ஏப்ரல் 13 ஆம் திகதி நிசாந்தன் ஓட்டிச் சென்ற உழவு இயந்திரம் இந்த கிளேமோர் குண்டு வெடிப்பிற்கு இலக்கானதில் நிசாந்தன் சம்பவ இடத் திலேயே பலியானார். அந்த உழவு இயந்திரத்தில் இருந்த மற்றொரு நபர் படுகாயமடைந்தார்.

விடுதலைப்புலிகளின் அரசாங்கத்தில் பணியாற்றும்போது இராணுவத்தின் தாக்குதலில் பலியானால் அவர்களுக்கு துணைப்படை உறுப்பினர் என்ற மதிப்பு வழங்கப்படும் இந்த பட்டத்தைக் கொண்ட குடும்பமானது அவர்களின் வாழ்நாள் முழுவதும் அந்த உறுப்பினரின் சம்பளத்தைப் பெறுவதற்கு தகுதிபெறும். நிசாந்தனின் குடும்பமானது நீண்டகாலத்திற்கு விடுதலைப் புலிகளிடமிருந்து அந்த கொடுப்பனவைப் பெறவுள்ளது.

### சிறுவர்களை கொன்ற படையினர்

1974 ஆம் ஆண்டிற்கும் 2004ஆம் ஆண்டிற்கும் இடையில் 18 வயதிற்குட்பட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகள் இராணுவத்தினால் கொல்லப்பட்டுள்ளனர். 2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் 18 வயதிற்குட்பட்ட மூன்று பிள்ளைகள் இரரணுவத்தால் அல்லது அவர்களுடன் இயங்கும் குழுக்களால் கொல்லப்பட்டுள்ளனர்.

2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி மூன்று வயதான டிக்சன் மன்னாரில் கடற்படையினரால் கொளுத்தப்பட்டான். 2005டிசம்பர் 28ஆம் திகதி இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினரால் தனது பெற்றோர் முன்னிலையில் 15 வயதான தம்பிராஜா அருணாநந்தன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2006ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினால் மட்டக்களப்பில் 16வயதான கோபாலகிருஷ்ணன் சுரேஷ் சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் சிறுவர்களை இலக்கு வைத்து இராணு வத்தினர் மேற்கொண்ட செயற்பாடுகளினால் 18வய திற்கு உட்பட்ட இரண்டு சிறுவர்கள் காய மடைந்துள்ளனர்.

2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ஆம் திகதி அம்பாறையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் யோகேஸ்வரி எனும் குழந்தை காயமடைந்தது.

2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி இராணுவத்தினரின் உத்தரவிற்கமைய பற்றைகளை சுத்தம் செய்யாத ஜேம்ஸ் நிரோஷன் எனும் சிறுவன் இராணுவத்தினால் தாக்கப்பட்டான்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டதையடுத்து இராணுவத்தின் தாக்குதலால் பல குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினால் 5000ற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் விடு தலைப் புலிகளின் சிறுவர் பராமரிப்புக்குழுவானது பல சந்தர்ப்பங்களில் யுனிசெப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ள போதிலும் யுனிசெப்பினால் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையிலேயே யுனிசெப் நிறுவனம் சிறுவர்களை தங்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்குமாறு விடுதலைப் புலிகளைத் கேட்டுள்ளது.

என விடுதலைப்புலிகளின் சிறுவர் பராமரிப் புக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யுனிசெப் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,விடுதலைப்புலிகளின் துணைப் படையைச் சேர்ந்த 17 வயதான நிசாந்தன் வவுனியாவின் வடபகுதியில் கிளைமோர் குண்டுவெடிப்பில் பலியனாதையிட்டு தங்களின் அனுதாபத்தைத் தெரிவிப்ப தாகக் கூறியுள்ளது.

அத்துடன் இந்த சம்பவமானது சிறுவர்களை நேரடியாக போராட்டத்தில ஈடுபடுத்துவது மற்றும்பொருட்களை விநியோகிப்பது ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் அபாயத்தை எடுத்துக்காட்டுகிறது. சிறுவர்களைப் பணிக்கு அமர்த்துவது வன்முறைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் அவர்களின் உரிமையை நேரடியாக மீறும் செயலாகும்.தங்களின் கட்டுப்பாடடில் இருக்கும் அனைத்து சிறார்களையும் அவர்களின் பணியிலிருந்து விடுவிப்பதுடன் சிறுவர்களை சேர்ப்பதனை தவிர்த்துக்கொள்ளுமாறும் யுனிசெப் விடுதலைப்புலிகளுக்குத் தெரிவிக்கிறது.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் யுனிசெப் தனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது என யுனிசெப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (க)

# நோர்வே எதிர்ப்பை கைவிட ஏழு அமைச்சுக்கள் பேரம்

இலங்கை அமைதி முயற்சிகளின் அனுசரணையாளரான நோர்வேயை ஜே.வி.பி எதிர்ப்பைக் கைவிட ஏழு அமைச்சுப் பொறுப்புக்களை பேரமாக வழங்க மஹிந்த ராஜபக்ஷ முன்வந்துள்ளதாக தெரிகிறது.

சமதான செயற்பாடுகளில் நோர்வே அரசாங்கத்திற்கு எதிராக தெரிவிக்கும் எதிர்ப்புக்கள் மற்றும் கடுமையான கொள்கைகளைக் கைவிட்டு அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முயற்சிக்குமாறு ஜே.வி.பிக்கு மஹிந்த அறிவுறுத்தல் விடுத்துள்ளார். ஜே.வி.பி மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்தால் மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் நான்கு பிரதியமைச்சுப் பொறுப்புக்களையும் வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாகவும் மஹிந்த கூறியுள்ளார்.

மஹிந்தவுக்குத் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் பற்றி ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ஸ தனது கட்சிக்குத் தெரிவித்ததையடுத்து கட்சியினுள் கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒரு சாரார் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று அரசாங்கத்துடன் இணைய வேண்டும் எனக் கூறுகையில் ஏனைய தரப்பானது அப்படிச் செய்யாது சுயாதீன குழுவாக எதிர்க்கட்சியில் இருந்து செயற்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. எனினும் இது தொடர்பில் ஜே.வி.பி. இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (க)

# பயிற்சிக்காக வெளிநாடுசென்ற 122 மருத்துவர்கள் நாடு திரும்பவில்லை

விசேட மருத்துவப் பயிற்சிக்காக வெளிநாடு சென்ற 122 மருத்துவர்கள் அவர்களது பயிற்சிக் காலம்முடிவடைந்த போதிலும் இன்னமும் நாடு திரும்பவில்லையென்று சுகாதாரப் பராமரிப்பு ஊட்டச் சத்து அமைச்சு தெரிவித்துள்ளது. பயிற்சிக்காக வெளிநாடு சென்ற மருத்துவர்கள் அனைவரும் பிணைப்பணம் செலுத்தும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்துஇடுவது வழக்கம் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விதம் நாடு திரும்பாதிருக்கும் மருத்துவர்கள் பிணைப்பணமாக 113 மில்லியன் ரூபாவை அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டியிருக்கிறது என்றும் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு பிணைப்பணம் செலுத்தாத் மருத்துகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்


## 4 பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்

### சட்டவாக்கமும் விதிகளும்

1.தேசிய சட்டத்தைச் சர்வதேச சமவாயங்களுக்கு இசையச் செய்தல்.

2.ஆயுதப் படையினர், பாதுகாப்பு ஆளணி, சமூக சேவைகள் ஆற்று வோர் ஆகியோருக்கு மனித உரிமைகள் மனித நேயச் சட்டம் ஆகியன பற்றிப் போதிக்க ஏற்பாடு செய்தல்.

3.உரிமைகள் மீறப்படும் போது



அதனை அறிவிக்கவும், விசாரிக்கவும் அத்துடன் சட்ட உதவி அளிக்கவும் தகுந்த அமைப்புகளை உருவாக்குதல்.

4.கல்வி தொடர்பான எல்லா நடவடிக்கைகளிலும் உரிமைகள் தொடர்பான கல்வியையும் சேர்த்துக் கொள்ளுதல்.

5.உரிமைகள் பற்றிய அறிவைப் பரப்புவதில் குடிமக்கள் சமூகத்துக்கும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கும் ஆதரவளித்தல்.

6.ஆட்சி அதிகாரமற்ற அமைப்புகள், மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டத்திற் பற்றுறுதி கொள்ள ஊக்கமளித்தல்.

### தொடர்பாடலும் பிரசாரமும்

கொள்கைகள்

*'பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்' என்னும் கருத்துத் தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் வெகுசனத் தொடர்பாடலும் பிரசாரமும் அத்தியாவசிய அம்சங்களாம்.

*வெகுசனத் தொடர்பாடலும் பிரசாரமும் பக்கச் சார்பற்றதாகவும் எவர் மீதும் பழி சுமத்தாது அக்கறையூட்டுவதாயும் செயலாற்றத் தூண்டுவதாயும் அமைதல் வேண்டும்.

*குறிப்பிட்ட சம்பவங்கள் பற்றிய தொடர்பாடலும் பிரசாரமும் வழக்கமாக சம்பந்தப்பட்ட தரப்பு அல்லது தரப்பினருடன் நேரடியாகவும் சாதுரியமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### செம்மையான நடைமுறைகள்

1.மேலே விவரித்த எல்லா நடவடிக்கைகளையும் தழுவிய முறையில் விரிவான தொடர்பாடல் பிரசாரத் திட்டமொன்றை வகுக்கவும்.

2.மேலே குறித்த கொள்கைகள், செம்மையான நடைமுறைகள் ஆகியவற்றை ஆதரித்து வெகுசன தொடர்பாடல் மற்றும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

3.மேலும் முழுமையான முறையிலே வெகுசன தொடர்பாடல் மற்றும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இது விடயத்தில் ஆயுதப் பிணக்குகளில் பாதிப்புற்ற பிள்ளைகளின் அவல நிலையையிட்டும் பொதுமக்கள் அதிக உணர்வும் அக்கறையும் கொள்ளச் செய்தல் அவசியம். அத்துடன் 'பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்' என்னும் கருத்து பொது மக்களின் ஆதரவைப் பெருக்குதலும் வேண்டும்,

4.பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள் என்பது தொடர்பான கொள்கைகளை நிலைநாட்டுவதில் அல்லது செம்மையான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதில் குறிப்பிட்ட இடர்பாடுகள் தோன்றும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் சாதுரியமான முறையில் நேரடியாகத் தொடர்பாடலையும் பிரசாரத்தையும் நடத்தவும்.

### தாபனவாரியான அமைப்புகளும் நடைமுறைகளும்

கொள்கைகள்

*முடியுமான போதெல்லாம் ஏற்கனவே நிலை பெற்றிருக்கும் அரசாங்க சமுதாய மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளையும் நடைமுறைகளையும் உபயோகிக்கவும் ஆதரிக்கவும் வேண்டும். ஏற்கனவே உள்ள ஏற்பாடுகள் போதாவெனத் திட்டவட்டமாகத் தெரிந்தால் மட்டுமே புதிய அல்லது சமாந்தரமான அமைப்புகளும் நடைமுறைகளும் பற்றிச் சிந்தித்தல் வேண்டும்.

*பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள் என்னும் கருத்தைப் பரப்புதற்கும் மற்றும் பிரசாரத்தின் முன்னேற்றத்தை அவதானித்தற்கும் பிரதிநிதித்துவப் பங்கான சபையொன்று பொறுப்பேற்றல் வேண்டும்.

*அத்தகைய சபையானது பிள்ளையின் உரிமைகள் பற்றிய பிரசாரம் கண்காணிப்பு ஆகியன தொடர்பான பூரண தேசிய கட்டமைப்பின் ஓர் அங்கமாயிருத்தல் வேண்டும்.

### உத்தேச நடவடிக்கைகள்


1.பிள்ளையின் உரிமைகள் பற்றிய சமவாயத்தினைப் பிரசித்தப்படுத்தவும் அது கடைப்பிடிக்கும் பாங்கினைக் கண்காணிக்கவும் சர்வவியாபகமான தேசிய அமைப்போ நடைமுறையோ இல்லாமையால் அத்தகைய அமைப்பினையும் அதனோடிணைந்த நடைமுறைகளையும் உருவாக்குதல்.


2.பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள் என்னும் கருத்தையும் அதையொட்டிய கொள்கைகள் செம்மையான நடைமுறைகள் ஆகியவற்றையும் பரப்புதற்கும் அம்முயற்சியின் பலாபலனை அவதானிப்பதற்கும் சர்வவியாபகமுள்ள தேசிய அமைப்பினை அல்லது நடைமுறையினை வகுத்து உருவாக்குதல்.



3.பிள்ளையின் உரிமைகள் பற்றிய சமவாயத்தைப் பொதுவாகவும் ஆயுதப் பிணக்கில் பிள்ளைகளைக் குறிப்பாகவும் தழுவியதான தகவல் பரிவத்தனை அமைப்புகளை நிறுவுதல்.

(முற்றும்)





கேவில் அ.த.க. பாடசாலை மாணவர்கள் கற்றல் செயற்பாட்டின் போது....

(படங்கள்: விஷ்ணு, சிவா)

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகுமதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## குயிலின் ஆணவம்!

அன்று மகரந்தகொடி என்ற காட்டில் பாட்டுப் போட்டி. நிறைய பறவைகள் மிகவும் பரபரப்பாக பயிற்சி செய்து கொண்டிருந்தன. போட்டியில் பங்குபெற இசைக்குயில் தன்னுடைய தோப்பிலிருந்து புறப்பட்டது. தன்னை மிஞ்ச யார் உண்டு. தனக்குத்தான் முதல் பரிசு! என்ற ஆணவத்தில் யாரையும் மதிக்காமல் சென்று கொண்டிருந்தது.

அதே போட்டியில் பங்குபெறப் பறந்து வந்த காகம் ஒரு குளக்கரையில் குயிலைச் சந்தித்தது.

“எங்கே இவ்வளவு தூரம்?” என்றது குயில்.

“பாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளத்தான்” என்றது காகம்.

“நீயா...? இசைப் போட்டியிலா... பங்குபெறப் போகிறாயா... உன்னோட குரல் அழகு ஊர் அறிஞ்ச விஷயமாச்சே... உனக்கு ஏன் இந்த விபரீத ஆசை?” என்று கிண்டல் செய்தது குயில். காகம் ஒரு இசை ஆசிரியரிடம் கடந்த ஒரு வருடமாக பாட்டு கற்று வந்தது.




கூடவே இறை நம்பிக்கை அதிகம் கொண்டது காகம்.

இறைவனிடம் மிகவும் உருக்கமாக பிரார்த்தித்து விட்டு மிகுந்த நம்பிக்கையுடன் போட்டியில் கலந்துகொள்ள வந்தது.

இரண்டுமே குளத்து நீரைக் குடித்துவிட்டுப் போட்டியில் பங்குபெற்றன. குளத்துத் தண்ணீர் ஒத்துக்கொள்ளாததால் குயிலுக்குத் தொண்டை கட்டிக்கொண்டது. “கீச்... கீச்...” என்று எலி பேர்ல் ஆனது குரல்.

திடீரென்று காகத்திற்கும் தொண்டை கட்டிக்கொண்டாலும் அதன் குரல் வித்தியாசமான தொனியில் ஒலித்தது.

அதன் வித்தியாசமான குரல் பறவைகளிடையே ஏகோபித்த வரவேற்பை பெற்று முதல் பரிசைப் பெற்றுத்தந்தது. பாடி அசத்திய காகத்திற்கு பாராட்டு மழை பொழிந்தது. விழாவிற்கு தலைமை ஏற்ற இசையமைப்பாளர் குயில் குரானா. தன்னுடைய புதிய படத்தில் பாடல்கள் பாட காகத்தை புக் பண்ணினார். தான் தான் ஜெயிக்கப் போகிறோம் என்ற ஆணவத்தில் பயிற்சி கூட செய்யாமல் வந்த குயில் தோற்றுப்போய் அவமானத்துடன் வெளியேறியது.

சிறுவர்களே!

ஆணவத்துக்கு பின் வருவது அழிவு என்பதை மறந்து விடாதீர்கள்.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்தபட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?






சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

## புத்திசாலி ஒட்டகச் சிவிங்கி

சராசரி மனிதர்களைப் போல் 3 மடங்கு உயரம் வளரும் ஒட்டகச் சிவிங்கிகளால் தண்ணீர் குடிக்கா



மல் இரண்டு வாரம் வரை உயிர் வாழ முடியும். ஆழ்ந்த தூக்கம் என்றால் அது ஒட்டகச் சிவிங்கிகளுக்கு மிகக் குறைவுதான். நின்றுகொண்டே அவற்றால் தூங்க முடியாது. இதனால் அவ்வப்போது தூங்கி எழுந்து கொள்ளும். தரையில் நான்கு காலைகளையும் பரப்பி வைத்து தலையைக் கீழே வைத்த நிலையில்தான் ஒட்டகச் சிவிங்கிகள் தூங்கமுடியும். அந்தத் தூக்கமும் கூட சில நிமிடங்கள்தான்.

குட்டி பிறந்த ஒரு சில மணி நேரங்களில் எழுந்து நிற்க முடியும். தாயுடன் குட்டி 15 மாதங்கள் வரை சேர்ந்தே வாழும்.

சிங்கமும் சிறுத்தையும் தான் ஒட்டகச் சிவிங்கிகளுக்கு கிலி தருபவை. தனியாக இருந்தால் இந்த இரண்டு மிருகங்களும் தங்களை வேட்டையாடித் தின்றுவிடும் என்பதால் புத்திசாலித் தனமாக வரிக் குதிரை, மான் போன்ற பிராணிகளின் கூட்டத்தினருடன் சேர்ந்தே காணப்படும்.

## ஜே.என்.டாட்டா



தற்போது டாட்டா என்றாலே உலகப் பிரசித்தி பெற்ற பெயராகி விட்டது. அது கி.பி.1859ஆம் ஆண்டு. அப்போது டாட்டாவுக்கு வயது இருபது. அவருடைய தந்தை ஓர் வியாபாரி.

ஒரு வியாபாரம் என்பது மற்றவர்களை ஏமாற்றித்தான் காசு சேர்ப்பதல்ல. அது நியாயமானதாகவும் நேர்மையானதாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார் பெரும் பணக்காரர்களில் ஒருவரான ஜாம்ஷெட்ஜீ நஸர் வான்ஜி டாட்டா. இவரை பிற்காலத்தில் ஜே.என்.டாட்டா என்ற பெயரில் அழைத்தனர். தம் தந்தைக்கு வியாபாரத்தில் உதவி செய்யும் சாதாரண உதவியாளராகச் சேர்ந்தார் டாட்டா. அந்த நேரத்தில் திடீரென அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் மூண்டது.

அதுவரை இங்கிலாந்தில் இருந்த பஞ்சாலைத் தொழிற்சாலைகள், தங்களுக்குத் தேவையான பருத்தியை அமெரிக்காவிலிருந்துதான் வாங்கிக் கொண்டிருந்தனர். அமெரிக்கப் போரால் இந்தத் தொழில் ஸ்தம்பிப்பதைப் போலக் காணப்பட்டது. எனவே இங்கிலாந்து சட்டென்று அமெரிக்காவிலிருந்து பருத்தி வாங்கும் வழக்கத்தை கைவிட்டது. இந்தியாவிலிருந்து அது வாங்கத் தொடங்கியது. இந்த வாய்ப்பு ஒரு நல்ல வாய்ப்பு என்று கருதிய டாட்டா இதைப் பயன்படுத்திக் கொண்டார். அவருடைய வியாபாரம் மென்மேலும் பெருகியது. ஆகவே அவர் இதைக் கவனித்துக்கொள்வதற்காக தம்முடைய நிறுவனத்தின் கிளை ஒன்றை இங்கிலாந்தில் திறந்தார்.

இந்தியாவில் இருந்த டாட்டா லண்டனுக்குக் குடிபெயர்ந்தார். கி.பி 1865ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் முடிவடைந்தது. இதன் காரணமாக உலக மார்க்கெட்டில் பருத்தியின் விலை மளமளவென்று சரிந்துவிட்டது. பருத்தி கொம்பனி வியாபாரிகள் அனைவரும் பெரும் நஷ்டத்தை அடைந்தனர். டாட்டா திறந்திருந்த இங்கிலாந்தின் அலுவலகம் திவாலாகிவிட்டது. தம்முடைய நிலையை உள்ளது உள்ளபடியே வங்கிகளிடமும் தமக்குக் கடன் கொடுத்தவர்களிடமும் சொன்னார் டாட்டா. அவர் அவ்வாறு வெளிப்படையாகப் பேசுவார் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை. தான் நிச்சயம் அவர்கள் கடனை அடைத்து விடுவதாக உறுதிமொழி கூறினார். அவர் அதுபோல மெல்ல மெல்ல அவர்களுடைய கடனை அடைத்துவிட்டார். அவரது நேர்மையைக் கண்டு பலரும் வியந்தனர். அவருக்குக் கடன் கொடுத்த பிரபலமான பணக்காரர்களில் ஒருவரான ஜெ.ஹெச் கெய்தர் என்பவர் சொன்னார்,

‘இளைஞனே நிச்சயமாக வாழ்க்கையின் பல சிகரங்களை தொடுவாய்’ என்று வாழ்த்தினார். அதுபோல இன்று நடந்துவிட்டது. எங்கும் டாட்டா... எதிலும் டாட்டா... இவர் பெயரைத் தெரியாதோர் இல்லை! டாட்டா அந்த அளவுக்கு உயர்ந்துவிட்டார். அதற்குக் காரணம் அவரது நேர்மையும் வாக்குறுதியும்தான். எந்த விஷயத்திலும் உண்மையாய் இருந்தால் அதற்கான பலனை நிச்சயம் அடையலாம்.


## முதல் நீர்மூழ்கிக் கப்பல்

முதன் முதலில் நீர்மூழ்கிக் கப்பலுக்கான வரைபடத்தை உருவாக்கியவர் வில்லியம் போர்னே என்னும் இங்கிலாந்துக்காரர். இவர் 1578ஆம் ஆண்டு நீர்மூழ்கிக் கப்பலுக்கான வரைபடத்தை வரைந்தார். எனினும் கார்னிலியூஸ் வான் டிரெப்பல் என்னும் நெதர்லாந்து நாட்டுக்காரர் 1620ஆம் ஆண்டு முறையான நீர்மூழ்கிக் கப்பலை வடிவமைத்தவர். நீரில் மூழ்கக் கூடிய ஒரு படகைத் தயாரித்த அவர் அதில் பிராணவாயு கிடைப்பதற்காக நீண்ட குழாயை இணைத்திருந்தார். நீருக்குள் மூழ்கியிருப்பவர் துடுப்பு மூலம் படகை இயக்கவேண்டும். 12 படகோட்டிகளுடன் தான் வடிவமைத்த நீர்மூழ்கிக் கப்பலை அவர் லண்டன் தேம்ஸ் நதியில் இயக்கிக் காட்டினார். 3 மணிநேரம் இந்தக் கப்பல் நீருக்கடியில் இருந்தது.



இராணுவத்திற்கான நீர்மூழ்கிக் கப்பலை 1776ஆம் ஆண்டு டேவிட் புஷ்னல் என்னும் அமெரிக்கர் வடிவமைத்தார். எனினும் சகல வசதிகளுடனும் கூடிய முதல் நீர்மூழ்கிக் கப்பல் ஜான் பி.ஹாலண்ட் மற்றும் சைமன் லேக் என்னும் இருவர் 1890ஆம் ஆண்டு ஒரேநேரத்தில் தயாரித்தனர். ஜானின் நீர்மூழ்கிக் கப்பலின் டிசைனை அமெரிக்காவும் சைமன் லேக்கின் வடிவமைத்ததை ரஷ்யா - ஜப்பான் நாடுகளும் ஏற்றுக்கொண்டு தயாரிக்க ஆரம்பித்தன.

# புத்தாண்டு பலாபலன்கள்



## தனுசு

*உடல் ஆரோக்கியம்:-* உங்களின் உடல் நலம் சிறப்பாகவே அமையும். மனதில் சந்தோஷமும் நிம்மதியும் உண்டாகும். மனைவி மற்றும் பிள்ளைகளின் நலத் தில் சுபிட்சம் உண்டாகும். மருத்துவச் செலவுகள் குறை யும். பிற்பாதிக்காலம் சாதகமற்று இருக்கும். உங் களது முயற்சிகளை மேற்கொண்டு எதையும் சமாளித்து விடும் வலிமை பெறுவீர்கள். அலைச்சல் டென்ஷன் தவிர்க்க முடியாதது. எதிலும் சற்று கவனம் தேவை யாகும்.

*கொடுக்கல் வாங்கள்:-* கொடுக்கல் வாங்கலில் முற் பாதிக்காலம் அனுகூலமாகவும் பிற்பாதிக்காலம் மிக வும் எச்சரிக்கையுடனும் செயல்படவேண்டிய கால மாக உள்ளது. முற்பாதியில் தாராளமாக பெரிய தொகைகளையும் கொடுத்து அனுகூலமும் பெரிய மனிதர் களின் ஆதரவையும் பெறுவீர்கள். பிற்பாதி யில் சில சிக்கல்களில் சிக்க நேரிட்டாலும் எதையும் சற்று சமா ளித்துவிடும் சாமர்த்தியம் பெறுவீர்கள். வீடு, மனை வண்டி வாகனம் போன்றவை செலவை தரும்.

*தொழில் வியாபாரம்:-* உங்களுக்கு ஏற்பட்ட போட்டி களும் பொறாமைகளும் விலகி உயர்வான நிலையை அடையப் போகிறீர்கள். தொழில் வியாபார நிலையில் படிப்படியாக வெற்றிகள் குவியும். உங்கள் பொருட் களை சிறப்பாக தயாரித்து நற்பெயருடன் விற்க முடி யும் லாபமும் அதிகம்கிட்டும். பிற்பாதியில் நிதான முடன் செயல்படவேண்டும். பெரிய தொகைகளை ஈடுபடுத் தக்கூடாது. கூட்டுத்தொழில் கமிஷன் ஏஜன்ஸி, காண் டிராக்ட் இவைகளில் பிற்பாதிகாலத்தில் இடையூறு கள்

சற்று தாமதமான முன்னேற்றம் உணடாகும்.

*14.04.2006 முதல் 29.06.2006 வரை*

உங்கள் ராசிநாதன் குரு பகவான் வக்ரம் பெற்று சஞ்சரிப்பதும் அஷ்டமச்சனி நடைபெறுவதும் உங்க ளுக்கு சற்று சாதகமற்ற அமைப்பாகவே இருக்கும். நீங்கள் எதிலும் மிகவும் நிதானமாகவே செயல்பட வேண்டிய காலமாகும். உடல் நலத்திலும் கூட சற்று கவனம் செலுத்துவது உத்தமம். சிறு சிறு வயிறு உபாதைகள் தேவையற்ற பயணங்களால் அலைச்சல் டென்ஷன் ஏற்படும் என்றாலும் எதையும் சமா ளித்து முன்னேற்றம் அடைவீர்கள். உங்கள் மன தைரி யம் உங்களுக்கு பலமாகும். மனைவி மற்றும் குழந்தை களின் வழியில் ஏற்பட்ட மருத்துவ செலவுகள் குறை யும் ஓரளவுக்கு ஆரோக்கியம் உண்டாகும். கணவன், மனைவி இடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து போவது மூலம் குடும்ப வாழ்வில் ஒற்றுமை உண்டா கும். எடுக்கும் முயற்சிகளில் தடைக்கும் பின்பு வெற்றி கிட்டும். உற்றார் உறவினர்கள் வருகையால் செலவு கள் ஏற்பட்டாலும் அதனை சமாளிக்கும் படியாக நெருங்கிய நண்பர் ஒருவர் உதவி செய்வார். பொருளாதார நிலையில் ஓரளவு பணவரவுகள் தடைப்பட்டு வரும் சிக்கன நடவடிக்கையை மேற்கொண்டால் கடன்கள் வாங்க வேண்டிய நிலை இருக்காது. திருமண சுப காரிய முயற்சிகள் சிறு சிறு தடைக்குபின் வெற்றி தரும் கொடுக்கல் வாங்கலில் முன்ஜாமீன் தருவதை தவிர்த்து விடுவது நல்லது. தொழில் சுமாராக நடை பெறும். கூட்டாளிகளையும் வேலையாட்களையும் அனுசரித்துப்போவது நல்லது. உத்தியோகநிலை யில் அதிகாரிகளின் ஒத்துழைப்பு குறைவாக இருக் கும்

தூரப்பயணங்கள் ஏற்பட்டு சிறு சிறு அலைச்சல் டென் ஷனைச் சந்தித்தாலும் அதன் மூலம் உங்களுக்கு சாதகமான அனுகூலப் பலன் கிடைக்கும். மனதில் ஏற் பட்ட குழப்பம் குறைந்து மனம் தெளிவுபெறும். குடும் பத்திலும் தேவையற்ற மருத்துவச் செலவுகள் குறை யும். உங்கள் உடல் நலம் சற்று சோர்வுடன் காணப் பட்டாலும் மனதைரியத்தால் தெளிவடைவீர்கள். மனைவியின் உடல்நலத்தில் முன்னேற்றம் உண்டா கும். பிள்ளைகளால் ஏற்பட்ட மன வேதனைகள் குறைந்து உங்கள் பேச்சை சற்று கேட்பார்கள். பொரு ளாதார நிலையில் தடைதாமதத்துடன் பண வரவுகள் வந்தாலும் நெருக்கமான உறவினர் ஒருவர் உதவி யால் உங்களது கடன்கள் மற்றும் பொருளாதார நிலை நெருக்கடிகளை சமாளித்து கடன்கள் இல்லாத நிலையை அடைவீர்கள். கணவன், மனைவி இடையே ஒற்றுமை இருக்கும். திருமண சுப முயற்சிக்கு இடை யூறுகள் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் எச்ச ரிக்கை தேவை. தொழில் வியாபார நிலையில் படிப் படி யான முன்னேற்றம் உண்டாகும். பெரிய அளவு லாபம் இருக்காது புதிய முயற்சிகளை தற்போது மேற் கொள்வது நல்லதல்ல. உத்தியோக நிலையில் அதி காரிகளின் ஆதரவு ஓரளவு கிட்டும். பதவி ஊதிய உயர்வு தாமதப்படும். புதிய வேலைவாய்ப்பு பிற்பாதியில் முயற் சியால் அமையும்.

*3.12.2006 முதல் 13.4.2007 வரை*

உங்கள் ராசியாதிபதி குருபகவான் விரையஸ் தானத்தில் சஞ்சாரிப்பதும் சனி பகவான் அஷ்டமத் தில் சஞ்சரித்து அஷ்டமச்சனி தொடர்வதாலும் உங் கள் உடல் நலரீதியாக கடுமையான பாதிப்புகளை உண்டாகும் காலமாக இருக்கும் கூடுமானவரை யிலும் வண்டி, வாகனத்திலும் பயணங்களி லும் எச் சரிக்கையுடன் செயல்படவேண்டிய காலமாகும். அடிக்கடி

# உங்கள் ராசிக்கு எப்படி?

டிராக்ட் இவைகளில் பிற்பாதிகாலத்தில் இடையூறு கள் தோன்றும்.

*உத்தியோகத்தர்களுக்கு:-* மேலதிகாரிகளின் அன் பையும் ஆதரவையும் அடைவீர்கள். உங்கள் திறமை களுக்கு ஏற்றபடி பதவி ஊதிய உயர்வுகளும் விரும் பிய இடமாறுதல்களும் அமையும். புதிய வேலை கிட் டும் பிற்பாதியில் உடல் நலம் சற்றே குறையும். அடிக் கடி விடுப்பு எடுத்து வேலை பளுவை அதிகரித்துக் கொள்வீர்கள். உங்களது திறமைகளை வெளிப் படுத்த சந்தர்ப்பம் கிட்டாது. முதலாளியின் சிடு சிடுப்பால் மன அமைதி குறைந்து பின்பு நிலமை சீரடையும்.

*பெண்களுக்கு:-* உங்களது உடல்நலம் சிறப்பாகவே அமையும் என்றாலும் பிற்பாதிக்கு பிறகு அலைச்சல் டென்ஷன் ஏற்படும். மனதில் புதிய உற்சாகம் உண் டாகும். இதுவரை தடைப்பட்ட திருமண சுபகாரியம் முற் பாதியில் சிறப்பாக கைகூடி நடைபெறும். எந்த முயற் சியை புதிதாக எடுப்பதனாலும் அதனை பிற்பாதியை விட முற்பாதியில் எடுத்தால் மட்டுமே வெற்றி கிட்டும். கணவன், மனைவி இடையே ஒற்றுமை சிறப்பாக இருக்கும். உத்தியோக நிலையில் பதவி உயர்வு கிட்டும்.

*மாணவ மாணவியருக்கு:-* கல்வியில் நல்ல முன் னேற்றமும் சிறப்பான மதிப்பெண்களையும் பெறு வீர்கள். மேற்கல்விக்கான முயற்சிகளை முற்பாதி யில் செய்தால் சிறப்பான மேன்மைகள் அமையும். விளையாட்டுப் போட்டிகளிலும் கவிதை கட்டுரை பேச்சுப்போட்டிகளிலும் சிறப்பாக செயல்படுவீர்கள். வெளியூர் வெளிநாட்டு பயணங்களில் பிற்பாதியில் ஈடுபடும் மாணவர்கள் சற்று கவனமுடன் செயல்பட் டால் முயற்சி வெற்றிதரும்.

*கலைஞர்களுக்கு:-* உங்களது கலை ஆர்வமும் திறமைகளும் சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்தும். உங்கள் பட வாய்ப்புகள் ஓரளவிற்கு சாதகமாக அமை யும். இசைத்துறையில் இருப்பவர்கள் ஏதேனும் சாதனை புரிவார்கள் பிற்பாதிக்காலத்தை பொறுமையுடன் நிதானமாக செலவிட வேண்டும். மறைமுக எதிர்ப்பு. களை சமாளிப்பீர்கள்.

*பொதுவாழ்வில்உள்ளவர்களுக்கு:-* அரசியல் வாதி களுக்கு முற்பாதி காலத்தில் நல்ல முன்னேற்றமும் பிற்பாதி காலத்தில் உடன் இருப்பவர்களால் கலகம் உண்டாகும். அதனை ஓரளவுக்கு சமாளிக்கும் வலிமை பெறுவார்கள். கட்சியின் உட்பூசல்களை பேசித் தீர்த் துக்கொள்வது உத்தமம்.

*தொழிலாளிகளுக்கு:-* உங்களுடைய வேலையின் மூலம் உழைப்பிற்கு அதிகமாகவே ஊதியம் பெறும் நிலையால் மனமகிழ்ச்சி உண்டாகும். மரவேலைத

யில் அதிகாரிகளின் ஒத்துழைப்பு குறைவாக இருக் கும் என்றாலும் உங்கள் பணியை சற்று கவனத்து டன் செய்து முடித்துவிட முடியும் புதிய வேலை வாய்ப்பு தாமதப்பட்டே கிட்டும் மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமான நிலை இருக்கும்.

*30.06.2006 முதல் 20.10.2006 வரை*

உங்கள் ராசியாதிபதி குரு பகவான் லாபஸ்தான மான 11ஆம் வீட்டில் பலமாக சஞ்சாரம் செய்வதன் மூலம் உங்களது வாழ்வில் ஏற்பட்ட சங்கடங்கள் எல் லாம் விலகி சிறப்பான ஏற்றங்களை அமையும் கால மாகவே இருக்கும். உங்களது செயல்பாடுகள் பரிபூரண வெற்றியை உண்டாக்கும். பணவரவுகள் பூரிப்பை குறிப்பிட்ட நேரத்தில் காப்பாற்றும் உள்ளத நிலையை பெறுவீர்கள். உங்கள் வாழ்வில் பல்வேறு இனிய சம் பவங்களை நிறைவேற்றி மகிழ்ச்சி அடைவீர்கள். தொழில் சிறப்பான உயர்வுகள் உண்டாகும். குடும் பத்தில் மங்களகரமான இனிய நிகழ்ச்சிகள் தடபுட லாக நடைபெறும் தேகநிலை மிகவும் அற்புதமாகவே இருக்கும். குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களா லும் மருத்துவச் செலவுகள் இருக்காது. புத்திர பாக்கி யம் உண்டாகும். மனதில் நிம்மதி ஏற்படுத்தும். கொடுக் கல் வாங்கலில் மிகுந்த அனுகூலமும் எதிர்பாராத ஸ்திர சொத்து சேர்க்கையும் உண்டாகும். வம்பு வழக் குகள் வெற்றிமேல் வெற்றியினை ஏற்படுத்தும். ஏஜன்ஸி, கமிஷன், காண்டிராக்ட் இவற்றில் உயர் நிலையை அடைவீர்கள் பொருளாதார நிலை மிகவும் அற்புதமாக செல்வம் செல்வாக்கை ஏற்படுத்தும். கடன் இருக்காது. வீட்டை கட்டி குடிபுகும் அமைப்பு, வண்டி வாகன யோகம் அமையும். தொழில் முன்னேற்ற மும் அபிவிருத்தியும் லாபமும் உண்டாகும். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகள் சிறப்புடன் அமைவார்கள். உத்தியோகநிலையில் உயர் அதிகாரிகளிடம் சிறப் பாக செயல்பட்டு பதவி ஊதிய உயர்வுகள் கௌரவ பத வியை வகித்திடும் யோகம் பெறுவீர்கள். மாணவர் களுக்கு சாதனைகள் செய்யும் அமைப்பு பரிசுகள் பாராட்டு கள் பெறும் அமைப்பு உண்டாகும். விவசாயம் பிரமாதமான பலன் தரும்.

*21.10.2006 முதல் 2.12.2006 வரை*

உங்கள் ராசியாதிபதி குரு பகவான் விரைய ஸ்தானமான 12இல் இக்காலத்தில் சஞ்சாரம் செய் வது தேவையற்ற வீண் விரயங்களை உண்டாக்கும் அமைப்பு என்றாலும் சர்பகிரகமான ராகு பகவான் முயற்சி ஸ்தானமான 3ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உங்களது தடைகளும் இடையூறுகளும் படிப்படியாக

உண்டாகும் காலமாக இருக்கும் கூடுமானவரை யிலும் வண்டி, வாகனத்திலும் பயணங்களி லும் எச் சரிக்கையுடன் செயல்படவேண்டிய காலமாகும். அடிக் கடி ஜுரம், தலைவலி, கண்களில் பாதிப்பு, வயிறு கோளாறுகளும் உண்டாகும். மனைவி, வழியிலும் கருச்சிதைவு கர்ப்பக் கோளாறுகள் மாதவிடாய் தொல் லைகள் ஏற்படும் மிகவும் கவனமாக செயல்பட வேண் டும். பிள்ளைகளால் மன அமைதி குறையும். அதிக மான மருத்துவச் செலவுகள் உண்டாகும். உங்கள் இல்லற வாழ்வில் அமைதி குறைவதோடு தேவை யற்ற கருத்து வேறுபாடுகள் மேலோங்கும். கணவன், மனைவி பொறுமையுடன் செல்படுவது உத்தமம். அலைச்சல், டென்ஷனை குறைத்துக் கொள்வது உத்தமம். பொருளாதார நிலையில் தேவையற்ற தடை கள் இடையூறுகள் வீண் விரயங்களும் உண்டாகும். சிக்கனமுடன் செயல்படவேண்டும். திருமண சுபமுயற் சிகளை மேற்கொள்வது தவிர்க்க வேண்டும். வியா பாரத்தில் பொருள் தேக்கமும் அரசு மூலம் கடுமை யான சோதனைகளால் நஷ்டமும் நலிவும் ஏற்படும் புதிய கூட்டாளிகளால் கைப்பொருள் இழப்பு ஏற்படும். தொழில் நிலையில் கடுமையான போட்டி பொறாமை கள் நெருக்கடிகளும் உண்டாகும். வேலையாட்க ளுக்கு சம்பளபட்டுவாடா செய்வதில் பிரச்சினைகள் உண்டாகி உற்பத்தி பாதிக்கும் படித்த இளைஞர்களுக்கு நல்ல வேலை அமையாது. உத்தியோக நிலையிலும் யாரோ செய்த தவறுக்கு நீங்கள் பதில் சொல்ல நேரி டும். உடல் சோர்வால் அடிக்கடி விடுப்பு எடுத்து மாண வர்கள் ஆசிரியர்களின் கெடுபிடிக்கு ஆளாக நேரிடும். அரசியல் வாதிகளுக்கு வம்பு வழக்குகளில் சிக்கி அவ மானப்பட நேரிடும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை மகசூலில் பாதிப்புகள் ஏற்படும்.

*பரிகாரம்:-* உங்கள் ராசிக்கு அஷ்டமச்சனி தொடர் வதால் நீங்கள் தொடர்ந்து சனிக்கிழமை விரதம் மேற் கொள்வது காக்கைக்கு எள் கலந்த அன்னம் வைப்பது சனிக்கிழமை மாலை வேளையில் சனி பகவான் ஆல யம் சென்று சனி காயத்ரி சனி மந்திரம் சொல்லி நீல நிற மலர்களால் அர்ச்சனைசெய்து அங்கு உள்ள ஏழை உடல் ஊனமுற்றவர்களுக்கு அன்ன தானம் செய் வது மூலம் சனியால் ஏற்படும் கெடுதிகள் மறையும். 21.10.2006க்கு பிறகு குரு 12 இல் சஞ்சரிக்கும் காலத் தில் குரு தட்சினா மூர்த்தியை வியாழக்கிழமைகளில் தரிசிப்பது நெய் விளக்கேற்றவதும் சனி பிரதோஷ கால பூஜையில் பங்கெடுத்துக்கொள்வதும் உத்தம பலனை தரும்.

(தொடரும்)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை

### பிறந்த மண்ணை நோக்கி.... 25



அகமத் காத்ரடா, இந்தியவம் சாவழியில் வந்த ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுள் ஒருவர்

எதிர்த்து நிறுத்தி விட்டால்....!இனவாரி மாநில நிர்வாக அமைப்பைத் திருத்தியமைப்பது என்ற வீர்வார்டின் திட்டம் இனப்பிரிவை நிரந்தரமாக்குவதை யும் சுரங்கத்திற்கு மலிவான தொழிலாளரைத் தொடர்ந்து பெறவும் செய்யப்பட்ட ஏற்பாடுதான் இதற்கு பாண்டுஸ்டான் திட்டம் எனப்பெயர்.

1956 பெப்ரவரியில் மண்டேலா மீண்டும் டிரான்ஸ் கிய்க்கு வந்தார். இந்தத் தடவை தான் பிறந்த மண் ணில் ஒரு வீட்டடி மனை வாங்கிவீடுகட்ட வேண்டும் என்ற ஆசையுடன் வந்தார். மாநில நிர்வாக உறுப்பின ராக நியமிக்கப்பட்டிருந்த சாக்வே என்பாரிட மிருந்து சிறு நிலப்பரப்பைவாங்கினார் அவருடன் பேசிக் கொண்டிருக்கும் போது மாநில நிர்வாகக் குழு என்ன தீர்மானம் நிறைவேற்றினாலும் திட்டம் போட்டாலும் ஒரு வெள்ளை மாஜிஸ்திரேட் ரத்து செய்து வீடுகிறார். இதனால் நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கும் மூத்த இனக் குழுத்தலைவர்கள் நேரடியாக வெள்ளை மாஜிஸ்திரேட்டுடன் மோதி வருவதைச் சொன்னார். இந்த முரண் பாடு வளர்ந்து வந்தது பாண்டுஸ்டான் திட்டத்தின் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை தளர்ந்து வருவதும் தெரிந்தது. மண்டேலா எங்கு சென்றாலும் போலிஸ் தொடர்ந்தே வந்தது.1956 மார்ச்சில் தடைச்சட்டம் மீண்டும் நீட்டிக்கப் பட்டு மூன்றாவது முறையாக மண்டேலாவிடம் தரப்பட்டது. ஜோகன்ஸ்பர்க்கை விட்டு வெளியில் எங்கும் நகரக்கூடாது ஒருவருக்கு மேல் உள்ள எந்தக் கூட்டத்திலும் பேசக் கூடாது குழந்தையும் மனைவியும் சேர்ந்திருக்கும்போது அவர்களுடனும் பேசக் கூடாது.

நடமாடத் தடை விதிக்கப்பட்ட இந்தக் காலத்தில்தான் மண்டேலா குத்துச் சண்டை பயிலத் தொடங்கினார். பயிலும் இடம்பல வசதிகள் இல்லாமல் கரடு முரடாக இருந்தது. மண்டேலாவின் மகன் தெம்புவும் இங்கு பயிற்சி பெற்று வந் தான் அதில் அவன் முன்னரே சேர்ந்து பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றிருந்தால்அவனே அப் பாவுக்கு ஆசிரியர் போலப் பயிற்சிகொடுத்து வந்தான். வாத்தியார் என்ற முறையில் கண்டிப்பாக இருப்பான். சில சமயம் தண்டனைகள் கூடக் கொடுத்தான் ஏதாவது தவறு செய்தால் மிஸ்டர் மண்லோ அது தப்பு என்பான் அந்த நேரத்தில் இடத்தில் அப்பா எனச் சொல்வது இல்லை வெளியில் வந்தவுடன் அப்பா என்று கொஞ்சுவான். இந்த இரட்டை மனிதனை உற்று நோக்குவார் மண்டேலா.

இங்கு பயிற்சி பெற்ற சிலர் ஆபிரிக்கா தேசிய விளையாட்டுப்போட்டிகளில் பிற் காலத்தில் தங்க, வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றனர். மண்டேலாவுக்கு இந்தப் பயிற்சியும் நீண்ட தூரம் ஓடும் பயிற்சியும் கொடுமையான சிறைச் சித்திரவதை களைத் தாங்கிக்கொள்ள உடல் வலிமையைக்கொடுத்தது. பயிற்சி நிலையம் பல வசதிகள் இல்லாது இருந்ததோடு கருத்து மோதலால் இரண்டாகப் பிளந்து இதைத் தொடர்ந்து போலீஸ் உடற்பயிற்சிக்கழகத்திற்குப் போய்ப் பயிற்சி பெற வேண்டி வந் தது. அந்த இடம் சரிப்பட்டு வரவில்லை எனவே மலிவான வாடகையில் ஆங்கிலி கன் சபை தந்த இடத்தில் பயிற்சி தொடர்ந்தது ஆபிரிக்கர்களுக்கு வறுமை நீங்கி பயிற்சி கிடைத்தால் பல துறைகளில் சிறந்து விளங்கக் கூடும் இவர்களை வறுமை வாட்டிற்று வசதிக்குறைவு வதைத்தது இருந்தும் குத்துச் சண்டைகளில் புகழ் பெற்றனர்.

### துரோகம்!

1956 டிசம்பர் ஐந்தாம் நாள் அதிகாலையில் யாரோ மண்டேலா வீட்டுக்கதவை முரட் டுத்தனமாகத் தட்டுவது தெரிந்து நிச்சயமாக இது நண்பர்கள் உறவினர்களாக இருக்க முடியாது தமது வழக்கமான சம்பந்தியாகத்தான் இருக்கவேண்டும் என நினைத் துக்கொண்டே கதவைத்திறந்தார். போலீஸ் அதிகாரி ருசோ முறைத்தபடி நின்றார் குழந்தைகள் பரபரப்புடன் எழுந்துவிட்டனர்.

ருசோ வாரண்டைக்காட்டினார். அரசைக் கவிழ்க்க முயன்ற தேசத் துரோக ராஜ துரோகக் குற்றத்திற்காக என்று இருந்ததைக் கண்டார் மண்டேலா வீடு சோத னையிடப்பட்டது. சில காகிதங்கள் புத்தகங்களை எடுத்துக்கொண்ட பின்னர் மண் டேலா கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவித்து வண்டியை நோக்கி அழைத்துச் செல்ல முற்பட்டனர். எத்தனை புரட்சிக்காரனாக இருந்தாலும் குழந்தைகள் மனைவி முன்னர் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்படுகிற காட்சியை விரும்பமாட்டார்கள் புரட்சிக் காரனின் வாழ்க்கை விரும்புகிறபடியா நடக்கும்?

மண்டேலாவின் அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்ட வண்டி ஊரின் வெளிப்புறச் சாலை வழியே சென்றது. வண்டியின் முன்புற இருக்கையில் மண்டேலாவை ருசோ தன் பக்கத்தில் விலங்கிடாமல் உட்கார வைத்திருந்தார். வண்டி ஓடிக்கொண்டி ருந்தபோது மிஸ்டர் ருசோ உன்னை இப்படியே நான் தள்ளிவிட்டு ஓடினால் ... என இழுத்தாராம் மண்டேலா.

வேண்டாம் மண்டேலா நீ நெருப்போடு விளையாடுகிறாய் என்றார் ருசோ.

நான் நெருப்பிலே பிறந்தவன் என்றார் மண்டேலா.

நீ ஜோக் அடிப்பது போல ஆபத்தான விஷயத்தைப் பேசுகிறாய் மண்டேலா.

ஆபத்தா அது எங்களுடன் பிறந்தது ஆச்சே என்றார் மண்டேலா.

வேண்டாம் மண்டேலா உன்னை நான் மரியாதையுடன் நடத்துகிறேன் நியும் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும் என்று ருசோ நட்புக்குரலில் பேசியவுடன் மண் டேலா அமைதியாகிவிட்டார். அதிகாரக் குரலை அன்பான குரல் புரட்சி காரனை யும் மென்மைப்படுத்துகிறது என்கிறார் மண்டேலா. அடுத்து அவரது அலுவல கத்தில் சோதனை நடந்தது. இதற்குள் வெளிவந்த பத்திரிகைகளில் பெரும் தடித்த எழுத்துக்களில் நாடெங்கிலும் நடந்த சோதனை கைதான தலைவர்களின் பட்டியல் வெளியாகியிருந்தது. அலுவலகச் சோதனைக்குப்பின் ஜோகன்ஸ்பர்க்கிலுள்ள மார்டல் மைதானத்தில் அமைந்திருந்த சிறைச்சாலைக்குக் கொண்டு போனர்கள் அங்கு ஏற்கனவே பல சமூகப் போராளிகள் கைதாகி உட்கார்ந்து இருந்தனர். தலைவர் லூதுலி, மாண்டி நாயக்கர், லிலியன் நுகோய், பயட் பெலவல்டு ஆகியோரும் கைதிகளாகக் கொண்டு வரப்பட்டனர்.

(தொடரும்)

## இராணுவ அதிகாரிகளை கொலை செய்ய 10 பேர் மட்டக்களப்புக்குள் ஊடுருவல்

### கொழும்பு ஊடகம் தகவல்.

(கொழும்பு)

முக்கிய இராணுவ அதிகாரிகள் மற்றும் கருணா குழு உறுப்பினர் களை இலக்கு வைப்பதற்காக விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவைச் சேர்ந்த பத்துப்பேர் மட்டக்களப்பு நகருக்குள் நுழைந் திருப்பதாக பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதென கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு ஊடகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சியிலிருந்து இருவாரங்களுக்கு முன்னர் மட்டக்களப் பிற்கு அனுப்பப்பட்டுள்ள தற்கொலைத்தாரிகளில் சில பெண்களும் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த தற்கொலைதாரிகளைப் பற்றிய தகவல்கள் வெளியானதை யடுத்து கடந்த வாரத்திலிருந்து மட்டக்களப்புப் பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக பிரதேசத்தின் அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை கைக்குண் டுடன் கைது செய்யப்பட்டவர் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை உறுப்பினரா என்ற சந்தேகம் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போது அந்த சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டி ருப்பதாக மட்டக்களப்பு பொலிஸ் அதிகாரி தெரிவித்திருப்பதாக கொழும்பு ஊடகத்தின் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (க)

## அரச ஊழியர்களின் வேலை நிறுத்தம் மீண்டும் தொடரும் சாத்தியமுள்ளதாம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பு போராட் டம் ஒன்றில் ஈடுபடும் நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்க ஊழியர்க ளின் ஊதிய மீளாய்வுக் குழு தெரிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்கள் மத்தியில் முரண்பாடுகளை தோற்று வித்த ஒய்வூதிய அதிகரிப்பு சுற்றுநிருபம் தொடர்பாக இதுவரை உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை என ஊதிய மீளாய்வுக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் அரச ஊழியர்கள் எதுவித அறிவுறுத்தலுமின்றி தொடர் பணிப்புறக்கணிப்பில் மீண்டும் ஈடுபடவேண்டி ஏற்படுமென அந்தக் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேசிய ஊதிய ஆணைக்குழுவின் அதிகாரி களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் ஊதிய மீளாய்வுக் குழுவின ருக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை யொன்று நடைபெற்றுள்ளது.

சுமார் 2மணிநேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தை எதுவித இணக் கமும் இன்றி முடிவடைந்துள்ளதாக குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரி வித்துள்ளார்.

சுற்று நிருபம் தொடர்பிலான முரண்பாடுகளுக்கு தீர்வு காணும் வரை சகல அரசாங்க ஊழியர்களுக்கும் 3 ஆயிரம் ருபா தற் காலிக ஊதிய அதிகரிப்பை வழங்குமாறு விடுத்த கோரிக்கையை இதுவரை தேசிய ஊதிய ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## சேது சமுத்திர திட்ட கப்பல் பாதை அமைப்பினால் சூழலுக்கு பாதிப்பு!

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்ட கப்பல் பாதை அமைப்பினால் ஏற்படும் சூழல் பாதிப்பு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட் டுள்ளதாக இலங்கை அரசு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்திய பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தையின் போதே குறிப்பிட்ட கப்பல் பாதைதொடர்பாக தொழில்நுட்பத்திலான இரண் டாம் சுற்றுப்பேச்சுவார்த்தை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச் சில் இடம்பெற்றது.

சேது சமுத்திர திட்டப்பாதையை அமைத்து அதனை நிர்வகித்து சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு முன்னெடுத்துச் செல்லும் தேவை யுள்ளதாக இலங்கை பிரதிநிதிகள் அங்கு தெரிவித்தனர்.

இந்தக் கப்பல் பாதை இந்திய மற்றும் இலங்கைக்கு இடையில் அமைந்திருக்கும் பாக்குநீரினை ஊடாக அமைக்கப் படவிருக்கி றது.

இதேவேளை, தென்னிந்திய துறைமுகங்களிலிருந்து கிழக்கு துறை முகம் வரை பாரிய அளவு கப்பல் போக்குவரத்து இந்தத் திட்டப் பாதை யின் ஊடக செல்வதனால் இந்தியாவிற்கு சாதகமான நிலைகாணப் படுகின்றது. (க-9)

## சகல பாடசாலைகளும் இன்று ஆரம்பமாகும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல அரசாங் கப் பாடசாலைகளும் இந்த ஆண் டின் இரண்டாம் கல்வி நடவடிக் கைகளுக்காக இன்று திறக்கப்பட வுள்ளதாக கல்வியமைச்சு அறி வித்துள்ளது.

நாட்டில் தமிழ், சிங்களப் பாட சாலைகளின் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இரு கட்டங் களாக நடைபெறவிருப்பதாக கல் வியமைச்சின் செயலாளர் அரி யரத்தின ஹேவகே தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதி தொடக்கம் யூன் மாதம் 16ஆம் திகதி வரை க.பொ. த.உயர் தரப் பரீட்சைகள் நடைபெறவிருப்ப தினால் இந்தக்காலப் பகுதியில் பாடசாலைகளுக்கு விடுமுறை கள் வழங்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் இன்று ஆரம் பமாகவிருக்கின்ற இரண்டாம் தவ ணையில் முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் மே மாதம் 19ஆம் திகதி வரை நடைபெறும்.

இரண்டாம் தவணையில் இரண் டாம் கட்ட கல்வி நடவடிக்கை கள் யூன்மாதம் 19ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதிவரை நடைபெறவிருப்பதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (க-9)

## டெங்கு தடுப்பு வாரம்.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுகாதார சேவை கள் மாகாணப் பிரதிப் பணிப் பாளர் பணிமனையினால் இன்று தொடக்கம் 30ஆம் திகதி வரை டெங்கு தடுப்பு வாரம் அனுஷ்டிக் கப்படவுள்ளது. (க-9)

ஒளி விளக்குகள் வைத்திருப்போர் ,மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச்செல்வார்களாக. -பிளேட்டோ

வலம்புரி

## இனவன்முறைத் தூண்டலுக்கு சிங்கள மக்கள் இடம் கொடுக்கலாகாது!

முதலாம் சுற்று ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் அமைதி நிலை குழம்பிப் போயுள்ளது.

இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறமாட்டாது என்ற முடிபை துணிந்து கூறும் அளவிற்கு நிலைமை மிக மோசமடைந்துள்ளது.

கடந்த யுத்த காலங்களில் நடந்த சம்பவங்களைவிட தற்போதைய நிகழ்வுகள் குறை பெறுமானத்தைக் கொண்டிருந்தாலும் யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும் போது வன்முறைச் சம்பவங்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெறுவதானது சமாதானச் சூழ்நிலையைப் பெரிதும் பாதிக்கவே செய்யும்.

ஜெனீவாவில் விடுதலைப்புலிகளும் அரசும் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பட்டுக் கொண்ட விடயங்களை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட பின்னடைவுகள் மீண்டுமோர் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய நிலைமைகள் யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இல்லாதுபோய் விட்டதா? என்ற கேள்வியை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

எதுவாயினும் சமாதானத்தை விரும்பாத தீய சக்திகள் வன்முறைகளை ஏற்படுத்தி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையேயான நல்லுறவைக் குழப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

குறிபாக, ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகள் சிங்கள மக்களிடையே இனத்துவேசத்தைத் தூண்டும் பிரசாரங்களையும் ஊடக அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றன.

இத்தகைய தீய சக்திகளின் பிரசாரங்களுக்குப் பின்னால் எடுபடாமல் இருப்பதை சிங்கள மக்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1983 ஜூலையில் ஏற்பட்ட இனக் கலவரத்தை மீண்டுமொரு தடவை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் செயலாற்றத் தொடங்கியுள்ளன.

அதன் ஒரு கட்டமே திருகோணமலையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களாகும்.

திருகோணமலையில் பெரும்பான்மையின மக்களை தூண்டிவிட்டு அப்பாவித் தமிழ் மக்களைக் கொலை செய்வதும் அவர்களது சொத்துக்களை நாசகாரம் செய்வதுமான நிகழ்வுகள் நடந்துள்ளமை வேதனைக்குரியது.

இத்தகைய சம்பவங்களுக்குப் பின்னால் சிங்கள மக்கள் இருப்பதாயின் அதன் விளைவு மிக மோசமானதாகவேயிருக்கும்.

எனவே, திருகோணமலையில் ஆரம்பித்த இனவன்முறையை தென்னிலங்கையிலும் ஆரம்பிப்பது தீய சக்திகளின் நோக்கமென்ற உண்மையை சிங்கள பெரும்பான்மை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்த உண்மைநிலை சமாதானத்தை வலியுறுத்தி அகிம்சை வழிப் போராட்டங்களாக பரிணமித்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அப்போதுதான் தீய சக்திகளின் வன்முறைக் கலாசாரம் அழிந்து நாட்டில் சமாதானம் ஏற்படும்.

# தமிழர்களை அழித்து இலங்கையை பௌத்த சிங்கள தேசமாக்குவதா 'மஹிந்தவின் சிந்தனை'

## இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் சிவநேசன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

**வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களை கொன்று குவித்துவிட்டு இலங்கை முழுவதையும் பௌத்த சிங்கள தேசமாக்குவதா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'மஹிந்த சிந்தனை' இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், இலங்கையின் புதிய ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னர் வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கட்டவிழ்த்துவிட்ட அரச பயங்கரவாத நடவடிக்கையினால் தமிழ் பேசும் மக்கள் கொலை செய்யப்படுவதும், காணாமல் போவதும் அவாகளது உடமைகள் எரியூட்டப்பட்டமை, கொள்ளையிடப்பவதும் உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதும் சர்வசாதாரணமாக நடந்தேறிவருகிறது.

ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தாத அரசு அடுத்த பேச்சுவார்த்தையில மேலும் தொடர்ந்து கதைப்பது முடியாத நிலை என்பதை உணர்ந்து .இரண்டாம் கட்டப் பேச்சுவார்ச்தையை குழப்பும் நோக்கத்தோடு தமது இராணுவ அடா வடித்தனத்தை தமிழ் பேசும் மக்கள் மீதும் நடாத்தி போரினை தொடர எண்ணியுள்ளமை அவர்களின் நடவடிக்கைகள் மூலம் அவதானிக்க முடிவதை சர்வதேசம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

குறிப்பாக முதலாவது கட்ட ஜெனீவாப் பேச்சில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மீள திரும்பி வந்த போது இலங்கையின் விமான நிலையத்தில் அவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டமை மக்களை அவமானப்படுத்துகின்ற செயலாகும்.

அதனைத் தொடர்ந்து வட- கிழக்கு தாயகத்தின் மையப் பகுதியான திருகோணமலையிலும் தமிழ் பேசும் மக்கள் மட்டும் வாழ்ந்துவரும் மட்டக்களப்பு மற்றும் யாழ். குடா நாட்டிலும் அரச பயங்கரவாத இன அழிப்பு வன்முறைகள கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளமையை சர்வதேசம் கவனத்தில் கொள்ளவேண்டும் இந் நடவடிக்கையை தமிழர் தாயகத்தில் வாழ்வோர் அனைவரையும் அழிந்தும் இலங்கையை பௌத்த சிங்கள தேசமாக்கும் முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது இதுவா மஹிந்த சிந்தனை?

இனறும் திருகோணமலையில் மக்களை தேடி கொலை செய்வதும் இருப்பிடங்களை தீயிடுவதும் அவர்களின் நிலங்களில் இருந்து விரட்டியடிப்பதும் தொடர்கிறது. இன் நடவடிகைக்கு துணையாக அரசபடைகளும் ஒட்டுக் குழுக்களும செயல்படுவதை பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியாகவும் இருக்கும் மஹிந்தவால் கட்டுப்படுத்த முடியாதிருப்பதன் காரணம்தான் என்ன?

மேலும் வடகிழக்கு மாகாணத்தில் அண்மைய கொலைச சம்பவங்கள் மக்களை மீண்டும் போருக்கு தூண்டும் நினைவாகவே கருதவேண்டியுள்ளது.

புத்தூரில் நடந்த ஐந்து பேரின் கொலைச் சம்பவமும் காலை நகரில் சுடப்பட்டு மரணமான பிரதேச சபை வேட்பாளர் இராசரத்தினம் வில்வரத்தினத்தின் படுகொலையும் நெல்லியடியில் நேற்று முன்தினம் மாலை சுப்பிரமணிம் வசிகரன் (கண்ணன்) என்ற ஆட்டோ வாகன உரிமையாளர் சங்கத் தலைவரும் அவரது சங்க உறுப்பினரும் சுட்டுககொல்லப்பட்ட சம்பவத்தையும் அரசே பொறுப் பேற்க வேண்டும் .

அத்துடன் இவ்வாறான கொடூர நிகழ்வுள் தமிழ் பேசும் மக்கள் வாழும் இராணுவக்கட்டுப்பாடு பிரதேசங்களில் நடைபெறுவது உடன் நிறுத்தப்படவேண்டும் கடந்த ஏழுவாரங்களில் 65 படுகொலைகள் நடைபெறுவதற்கு அரசே பொறுப்பாகவுள்ளது.

இந்நிலை தொடருமானால் மீண்டும் இலங்கையில் போர் ஏற்படுவது தவிர்க்க முடியாதாகிவிடும் மீண்டும் போர் ஏற்பட்டால் தமிழ் பேசும் மக்கள் மட்டு மல்ல சிங்கள அப்பாவி மக்களும் பாதிக்கப்படுவதுடன் இலங்கை அரசும் ஆட்டம் காணும் நிலை ஏற்படும் என்பதை கடந்த கால போர்த் தாக்குதல்கள் ஊடாக இலங்கை அரசு உணரத் தவறக் கூடாது.

உலக நாடுகள் பேச்சுவார்த்தை தொடர்வதற்கு எடுக்கும முயற்சியில் ஒரு வீதம் கூட இலங்கை அரசு எடுக்காது இருப்பது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தயுள்ளது.

இந்நிலை தொடர்வதை சர்வதேச சமூகம் அனுமதிக்கக் கூடாது வீணே அர்த்தமற்ற பிரச்சினைகளை உருவாக்கி புலிகள் மீது பழி சுமத்தப்பார்க்கிறார்கள்.

எனவே தமிழ் மக்களை தொடர்ந்தும் கொலைகளையும் துன்புறுத்தல்களையும் பொருளாதார அழிவுகளையும் அனுபவிக்காமல் சர்வதேச சமூகம் தொடர்ந்து விரைந்து தீர்வு காணப்படுவதற்கு ஒழுங்கு செய்யவேண்டும்.

அன்றேல் தமிழ் பேசும் மக்கள் தங்களது சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள வழிசெய்தல் வேண்டும் இலங்கை அரசின் கபட நாடகத்தை இனிமேலும் தமிழ் மக்கள் அனுமதிக்க தமிழ் மக்கள் பொறுத்திருக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்துவதற்கான காலம் உருவாகுவது தவிர்க்க முடியாததே என்றுள்ளது.

(க)

# போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசாங்கம் உடனடியாக விலக வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள்

(கொழும்பு)

**போர்நிறுத்த உடன்படிக்கையின் விதி முறைக்கமைய 14 நாட்கள் அவகாசத்தை புலிகளுக்கு வழங்கிவிட்டு அரசாங்கம் உடனடியாக உடன்படிக்கையிலிருந்து விலகவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.**

புலிகள் எந்த வகையிலும் பேச்சுவார்த்தையில் ஆர்வமானவர்கள் அல்ல. எனவே புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் முயற்சிப்பதில் பலனில்லை என்றும் ஹெல உறுமய தெரவித்துள்ளது.

இது குறித்து ஹெல உறுமயவின் பேச்சாளர் கருத்து தெரிவிக்கையில்,தொடர்ந்து பாதுகாப்புப் படையினரை புலிகளுக்கு பலிகொடுக்க முடியாது.

அத்துடன் அரசாங்கத்தால் மட்டும் போர்நிறுத்த உடன் படிக்கையை பேண முடியாது. இந்நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கையை புலிகள் பலவாறாக மீறிவருகின்றனர். ஆனால் அரசாங்கம் தொடர்ந்து பொறுமை காத்துவருகின் றது.

இது தொடர முடியாத வடயமாகும். அரசாங்கம் உடனடியாக போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகி புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை ஆரம்பிகக வேண்டும் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களை புலிகள் முன்வைத்து பேச்சில் கலந்துகொள்ள முடியாது என்று அறிவிக்கின்றனர்.

புலிகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய எந்த வொரு அவசியமும் இலங்கை இராணுவத்துக்கு கிடையாது என்றார்.

(க-7)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற நாடகப் பயிற் சியில் 2006ஆம் ஆண்டுக்கான 13ஆவது புதிய பிரிவு அடுத்த மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயற்சி நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெறவிரும்புவர்களுக்கும், நாடகமும் அரங்கியலையும் கங்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக அமையும்.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும் புவோர் யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங களைப் பெற்று அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும்.

(க-133,9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உலகிற்கு யார் ஒளி தரப் போகிறார்கள்? பண்டைக காலத்தில் தியாகம்தான் வாழ்க்கைக்கு உரிய விதியாக இருந்தது. இனிவரப் போகும் பலகோடி நூற்றாண்டுகளுக்கும் இந்த விதி அப்படியேதான் இருக்கப்போகிறது. பலரின் நன்மைக்காக அனைவரின் சக்திக்காக அனைவரின் சுகத்திற்காக உலகில் தைரியமும் சிறப்பும் பெருமளவல் பெற்றிருப்பவாகள் தங்களைத் தியாகம் செய்து கொண்டுதான் ஆகவேண்டும்என்றென்றும் நிலைத்த மாறாத அன்பும் கருணையும் பொருந்திய பலநூறு புத்தபிரான்கள் இப்போது தேவைப்படுகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர்

# 4ம் ஈழப் போரின் தொடக்கமே

# கிளைமோர்த் தாக்குதல்கள்

## அலசுகிறது ஆங்கில ஊடகம்

(கொழும்பு)

நான்காம் ஈழப் போரின் தொடக்கமாகவே அரச படையினருக்கு எதிரான கிளைமோர்த் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தி விபரம் வருமாறு;

வடக்குக் கிழக்கில் அண்மைக் காலத்தில் 51 படையினர் மற்றும் பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர். நாள் ஒன்றுக்கு மூன்று படையினர் வீதம் கொல்லப்பட்டு வருகின்றனர். பெரும்பான்மையான தாக்குதல்கள் கிளைமோர்த் தாக்குதல்களாக நடத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரும் இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அத் தாக்குதல்களில் 98 படையினர் கொல்லப்பட்டிருந்தனர். நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று மூன்று வெவ்வேறு கிளைமோர்க் குண்டுகள் வெடித்துள்ளன.

வவுனியா தாண்டிக்குளத்தில் இரு குண்டு வெடிப்புகளும் வெலிகந்தையில் ஒரு குண்டு வெடிப்புச் சம்பவமும் நடந்துள்ளன. இதில் ஒரு இராணுவ அதிகாரி மற்றும் மூன்று படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தகைய தாக்குதல்களில் அதிநவீன கிளைமோர்க் குண்டுகளே பயன்படுத்தப்படுகின்றன. கிளைமோர்த் தாக்குதல்களில் எந்தவொரு போராளியும் உயிரிழக்கவோ, படுகாயமடையவோ இல்லை என்பதிலிருந்து இதனை அறிந்து கொள்ளலாம்.

மரணம் விளைவிக்கும் இத்தகைய நவீன கிளைமோர்க் குண்டுகள் தொலை தூரத்திலிருந்து இயக்கப்படுகின்றன. இராணுவத்தினரது நடமாட்டத்தை தடுக்கும் வகையில் இக் குண்டுவெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் வானொலி அலைவரிசைகள் மூலமாகக் கூட விடுதலைப்புலிகள் கிளைமோர்க் கண்ணிவெடிகளை வெடிக்க வைத்தனர். இப்போது அவர்கள் நவீன தொழில் நுட்பத்திற்கு மாறியுள்ளனர்.

கிளைமோர்க் குண்டுகளை இயக்கச் செய்ய செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய புதிய வழிமுறைகளை நான்கு ஆண்டு காலத்திற்கு மேலாக நீடித்திருக்கும் சமாதான காலத்தில் தான் விடுதலைப்புலிகள் உருவாக்கியுள்ளனர்.

## ஆறு சிங்கள விவசாயிகள் திருமலையில் வெட்டிக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் போமரங்கடவெல என்னும் இடத்தில் நேற்று மாலை ஆறு சிங்கள விவசாயிகள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரிலிருந்து 40 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் போமரங்கடவெல கல்லம்பத்து கிராமத்தில் அறுவடைக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய சிங்கள விவசாயிகள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலில் ஆறு பேர் கத்தி வெட்டுக்கு இலக்கான நிலையிலேயே பலியாகியுள்ளதாகவும் நான்கு பேர் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஆறுபேரைக் காணவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தின் போது விவசாய அறுவடை இயந்திரம் ஒன்று தீ வைப்புக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலையடுத்து குறிப்பிட்ட கிராமத்திலிருந்த சிங்கள மக்கள் அங்கிருந்து பாதுகாப்பிற்காக இடம்பெயர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

---

## படையினர் சூடு; 3 இளைஞர்கள் பலி திருகோணமலையில் நேற்றுச் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் மூன்று தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சீனன்குடா பெல பிரிவுக்குட்பட்ட கப்பல் துறைக் கிராமத்தில் நேற்றுக் காலை வீதிச் சோதனை மேற்கொண்ட விமானப் படையினர் மீது கைக்குண்டு ஒன்றினை வீச முற்பட்ட இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கந்தளாயிலுள்ள இராணுவக் காவலரண் மீது தாக்குதல்கள் நடத்தியவர்கள் மீது இராணுவத்தினர் திருப்பித் தாக்கியதில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கந்தளாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். இம் மோதலில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். (ந-4,9)

---

## பேச்சுக்கு...

ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் தங்களது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் பாலித கோகன்ன கூறினார். இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, அமைச்சர் அனுராபிரியதர்சன யாப்பா ஆகியோரும் இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர். (ந-4)

---

## முன்னாள்...

(வயது 35) என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ். வைத்தியசாலைக்கு அண்மையில் வைத்து இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பிரஸ்தாப நபர் காயமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-15,132)

---

## நோர்வேத்...

னங்கள் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தனது கடும் அதிருப்தியை வெளியிட்டார்.

முன்னதாக கடிதம் ஒன்றையும் மகிந்தவுக்கு நோர்வே அனுப்பியிருந்தது. நோர்வேயுக்கு விளக்கமளிக்கு மாறு மங்கள சமர வீரவுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் இலங்கை வந்த நோர்வே சிறப்புப் பிரதிநிதி ஜோன் ஹன்சன் பௌயரை சந்திக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்து விட்டார். இதனால் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவையும் மங்கள சமரவீரவையும் ஹன்சன் பௌயர் சந்தித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜெப்ரி லான்ஸ்டெட்டும் மகிந்தவின் செயலாளர் லலித்வீரதுங்கவை அழைத்து பௌயரை மகிந்த ராஜபக்ஷ சந்திக்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால் அமெரிக்கத்தூதுவரின் கோரிக்கையையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளார். (ந)

---

## மிகப் பயங்கரமான போரை...

பேச்சுக்களுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவல் நிலைகள்மீது துணை இராணுவக் குழுவினரது உதவியுடன் தாக்குதல் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா அரச படைகளால் கருணா குழுவினருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது. திருகோணமலை தமிழ்மக்கள் பேரவைத்தலைவர் விக்கேஸ்வரனை இராணுவப்புலனாய்வுத்துறையினரும் துணை இராணுவக்குழுவினரும் இணைந்து படுகொலைசெய்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

துணை இராணுவக்குழுவினர் இல்லை என்று தொடர்ந்து ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ கூறிவருகின்றார். இத்தகைய வெட்கக்கேடான அரசாங்க மறுப்புக்கள் மூலம் ஜெனீவா உடன்பாடு அர்த்தமற்றதாகிவிட்டது.

தமிழ்த் துணை இராணுவக்குழுக்களை அரசாங்கமே பாதுகாக்கின்றபோது வன்முறைகள் நிறுத்தப்பட்டு முன்னேற்றகரமான அமைதிச் செயற்பாடுகள் எப்படி மேற்கொள்ள முடியும். தமிழர் தாயகப்பகுதிகளில் பழிக்குப் பழிவாங்கும் விதமாக தொடர்ச்சியாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்ற மோசமான சூழ்நிலையானது ஒரு பயங்கரமான இனப்போருக்குத்தான் இந்த நாட்டைத் தள்ளும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் தொடர்புடைய இருதரப்பினர் ஜெனீவாவில் பேச்சுக்கள் நடத்தி அதை மதித்து நடக்கவும் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் ஏக மனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆனால் இருதரப்பு நம்பிக்கையின்மை, சந்தேகங்கள் அதிகரித்து வருகின்றன. அமைதி முயற்சிகளில் அரசாங்கம் எந்தளவுக்கு ஈடுபாட்டுடன் உள்ளது என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் துணை இராணுவக் குழுக்கள் விடயத்தில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவ நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

கருணா குழுவை தமிழர்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ கணக்கிட்டு வருகின்றார்.

மகிந்த அரசாங்கம் இராணுவ வழித் தீர்வை விட்டுக் கொடுக்கவில்லை. பாதுகாப்புத் துறையில் போர் விரும்பிகளான கடும் போக்காளர்களின் நியமனமும், எரிச்சலூட்டும் இயல்பினதானதும் விட்டுக் கொடாத போக்கினை அனுசரிப்பதுமான போக்கில் சமாதான பேச்சுக்களை அணுகுவதில் நோர்வே அனுசரணையாளர்களை பகைமைக் கண்ணோட்டத்தில் பார்ப்பது சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகளுக்கெதிரான குரோதத்தனமான பிரசாரம் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக காட்டும் முயற்சி என்பன இராணுவத் தீர்வு மனோபாவத்தினுள் மகிந்த சிந்தனை சிக்குண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது என பாலசிங்கம் அப்பேட்டியில் தெரிவித்தார். (ந-4,5,6)


### அகில இலங்கை இந்து மாமன்றம்
### சிவதொண்டர் அம்புலன்ஸ் சேவை

யாழ்.மக்களுக்கு உதவும் பொருட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் சிவதொண்டர் அம்புலன்ஸ் சேவை ஊடாக பின்வரும் வசதிகளை வழங்குகின்றது.

- யாழ்ப்பாணம் - கொழும்பு நோயாளர் போக்குவரத்துச் சேவை.
- கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு நோயாளர்களை அழைத்து வருவதற்கான சேவை.
- யாழ்.குடாநாட்டில் அவசர நோயாளர்களுக்கான சேவை.
- ஆலய உற்சவ காலங்களின் போதும் இலவச சேவை.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**யாழ்ப்பாணம்**

சிவதொண்டர் அம்புலன்ஸ் சேவை,
இல. 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி- 021 222 3305

**கொழும்பு**

அகில இலங்கை இந்து மாமன்றம்,
91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.
தொலைபேசி- 011 2434990

(C-அ-364)








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.